Registered No. M-4483

Madras War Review { TAMIL 21-1-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV | 1944-ம்ஸு ஜனவரிமீ 21உ, வெள்ளிக்கிழமை | இதழ் 20

வசந்த காலத்தில் ரோமாபுரியி லிருப்போம்

☆

ரோமாபுரியைக் கைப்பற்றுவதற்காகத் தான் இப்போது இத்தாலியில் போராடு கிறோம். நேச நாட்டினர் வசந்த காலத்தில் ரோமாபுரியில் இருப்பார்கள்.

நான் எப்போதும் நம்பிக்கையோ டிருப் பவன். யுத்தத்தை முடிவு கட்டக் கூடிய உச்ச ஸ்தானத்தில் நாம் இருக்கிறோம். பிரான்சின் தென் பகுதியில் நாம் போய் இறங்குவதற்குச் சந்தர்ப்பம் இருக்குமானுல், கட்டாயம் அப்படித் தான் இறங்குவோம். அடுத்த வருஷத்திலேயே, அந்த ஆட்சிமுறை கவிழ்ந்து விடவுங் கூடும்.

ஜெனரல் சர் ஹென்றி மெய்ட்லான்ட் வில்சன்,
மத்தியதரைக் கடற்பகுதியில் நேச தேசப் படைகளின் மகா தலைவர், இத்தாலியில் சென்ற 17-ம் தேதி பத்திரிகா நிருபர்களிடம் கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.
வசந்த காலத்தில் ரோமாபுரியிலிருப்போம் ..	1
முரசொலி	2
கிருஸ்மஸ் வரவுகளுக்கு நன்றி	2
தலையங்கம் : ஜெர்மனியின் நெருக்கடியான நிலைமை	3
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4
சேமித்து வைப்பதின் திமைகள் (ராவ் பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.)	7
படம் ; லெப்டினெண்ட் கர்னல் திகம்பர் சிங் ப்ரார்	7
படம் : சோவியத் புலிக்கு பால்கன் நாடுகளைப் டலி கொடுக்கிறார் ஹிட்லர்	8
யுத்த காலத்தில் வரிப் பெருக்கம்	8

	பக்கம்.
பொறுக்கு மணிகள்	9
சென்னை சிப்பாய்கள் விழாக் கொண்டாட்டம்.	10
படம் : விமான பிரதம மார்ஷல் சர் ஆர்தர் டெட்டர்	10
படம் : இலங்கையில் சென்னை சாப்பர் மைனர் படை—	
விடுதிகள் கட்டுவதற்கு மூங்கில்களைப் பிளக்கிறார்கள்	11
பாலங் கட்டுகிறார்கள்	11
தண்ணீருக்குள் மூழ்குகிறவர் தன் கவசத்தை ஒழுங்காக அணிந்து கொண்டு முழுக அவருடைய தோழர்கள் உதவுகிறார்கள் ..	11
யுத்த நாட் குறிப்புக்கள்	12

மு ர சொ லி

“நேச நாடுகளுள் ஒன்றாக இஜிப்ட் இல்லாவிட்டாலுங் கூட, நேச நாடுகள் அனைத்தோடும், குறிப்பாக அமெரிக்காவோடும் ரஷ்யாவோடும், நெருங்கிய நட்புக் கொண்டிருக்கிறது.

—நஹாஸ் பாட்சா,

எகிப்திய முதன் மந்திரி, ஜனவரி 1[illegible]-ம் தேதி அரசாங்க சபையில் கூறியது.

*   *   *   *   *   *

“1944-ம் வருஷத்திலேயே ஆசியாவிலுள்ள நம் பொது எதிரியை வெல்ல முடியாது என்று சீன மக்களுக்குத் தெரியும். அவர்களை வெல்ல நெடுங்கால முயற்சி தேவை. ஆனால் ஐரோப்பாவில் உள்ள நம் பொது எதிரி இந்த வருஷக் கடைசிக்குள் அடியோடு அழிந்து விடுவான் என்னும் நம்பிக்கை, அவர்களுக்கு மிகுந்த ஆதரவையும் ஊக்கத்தையும் அளிக்கிறது.

—டாக்டர் வெல்லிங்டன் கூ,

லண்டனிலுள்ள சீன ஸ்தானீகர், ஜனவரி மாதம் 13-ம் தேதி லண்டனில் கூறியது.

*   *   *   *   *   *

“இப்போதுள்ள முழுப் பயிற்சி பெற்ற இந்தியப் படையினரும் உத்தியோகஸ்தர்களும் போராடுதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவர்களென்றாலும், 40 கோடி மக்களைக் கொண்ட அந்நாட்டின் தேவைகளை கொண்டு பார்த்தால், இவர்கள் எண்ணிக்கை மிகவும் கொஞ்சம் என்பது தெரியவரும். திறமையோடு தலைமை வகித்து நடத்தப்பட்ட போது, இவர்கள் ஆப்பிரிக்காவிலும் இத்தாலியிலும் மகா கெட்டிக்காரத்தனத்தோடு போராடினார்கள். பர்மாவிலும் அது போலவே போராடுவார்கள்.”

—மேஜர் ஜி. பீல்டிங் எலியெட்,

அமெரிக்க இராணுவ விமர்சகர், ‘ நியூ யார்க் ஹெரால்ட் ட்ரிப்யூன் ’ என்னும் பத்திரிகையில் ஜனவரி மாதம் 11-ம் தேதி எழுதியது.

*   *   *   *   *   *

வெற்றிபெற நாட்கள் செல்லும் ; பெரும் நஷ்டமும் ஏற்படும். ஜப்பானியர்களின் வெளியரண்களைத் தகர்க்க இப்போதுதான் நாம் ஆரம்பித்திருக்கிறோம். பயத்தினால்தான் நாம் இப்படிச் செய்கிறோமெனக் கூறுவது தவறு. நம் படைகளின் பலத்தைக் கண்டு, தாம் போராட முடியாத நிலைமையில், ஜப்பானியர்கள் இருக்கிறார்கள்.

—கர்னல் பிராங் நாக்ஸ்.

ஜனவரி மாதம் 14-ம் தேதி ஒஹியோவைச் சேர்ந்த க்ளீவ்லண்டில் கூறியது.

கிருஸ்மஸ் வரவுகளுக்கு நன்றி

மத்திய கிழக்குப் பகுதியிலுள்ள இந்திய செஞ்சிலுவைச் சங்கக் கமிஷனரிடமிருந்து வந்த கடிதத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு :—

“ சென்னை யுத்தக் கமிட்டியார் இந்த ஸ்தாபனத்திற்கு மிகத் தாராளமாக வழங்கிய 6,720 மிட்டாய் பொட்டலங்கள் கிடைத்தன. இது பற்றி நான் பெரிதும் நன்றி செலுத்துகிறேனென்று அவர்களுக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.”

“ மிட்டாய் பொட்டலங்கள் நன்றாகக் கட்டப்பட்டு, நல்ல நிலையில், கிருஸ்மஸ் நாளன்று நோயாளிகளுக்கும் காயப் பட்டவர்களுக்கும் விநியோகிக்கத் தக்கபடி, வந்து சேர்ந்தன. நோயாளிகளும் காயப் பட்டவர்களும் இதைப் பெரிதும் பாராட்டுவார்கள்.”

ஈராக் ஈரானிலுள்ள இந்திய செஞ்சிலுவைச் சங்க கமிஷனரிடமிருந்து வந்த கடிதத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு :—

“ பையோர்சிலுள்ள வைத்தியசாலைகளிலிருக்கும் நோயாளிகளுக்கு கிருஸ்மஸை முன்னிட்டு வழங்கும் பொருட்டு, சென்னை கூட்டு யுத்த உதவிக் கமிட்டியார் 12,000 பொட்டலங்கள் மிட்டாய் அனுப்பியது பற்றி, மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.”

“ கிருஸ்மஸ் இனம் பார்சல்கள் எல்லாவற்றையும் கட்டி, பல வைத்தியசாலைகளுக்கும் அனுப்பியாயிற்று.”

“ கிருஸ்மஸ் காலத்தில், நமது நோயாளிகள், நாமவர்களுக்கு அனுப்பும் உதவிகளைப் பெரிதும் பாராட்டுவது, நமக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி யளிக்கிறது.”

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஞு ஜனவரிமீ 21உ, வெள்ளிக்கிழமை | இதழ் 20

ஜெர்மனிக்கு நெருக்கடியான நிலைமை

ஜெர்மனி மிகவும் நெருக்கடியான நிலைமையிலிருக்கிறது. ரஷ்யப் படைகள் போராடும் முறை, ஜெர்மானியர்களை திகைக்கச் செய்கிறது. ரஷ்யர்கள் பெரும் படையாக வந்து திடீரென்று ஜெர்மன் படையினரைத் தாக்குகிறார்கள். போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே, திடீரென்று நிறுத்தி, வேறிடத்திற்குப் படைகளைக் கொண்டு போகிறார்கள். மீண்டும் பழைய இடத்தையே தாக்குகிறார்கள். இவை யெல்லாம் ஒரு பைத்தியக்காரன் வேலை போலத் தான் தோன்றும். ஆனால், உண்மை யது வல்ல. ஸ்டாலின் வகுத்த திட்டம் அது தான். அவர் திட்டம் இது வரை பொய்யாக வில்லை. ஆகவே, இனியும் பொய்யாகாது என்று ஒருவாறு துணிந்து சொல்லலாம். ஏனென்றால், அவர் ஒரு போர்த் தந்திர நிபுணர். தன் திறமையை யெல்லாம் திரட்டித் தான் அத்திட்டத்தை வகுத்திருக்கிறார். இந்தத் திட்டத்தின் பயனாக, ஜெர்மனி திரிசங்கு சுவர்க்கத்திலிருக்கிறது. "இருதலைக் கொள்ளி எறும்பு" போல் தத்தளிக்கிறது. தான் காப்பாற்ற வேண்டியது போலந்தா, ருமேனியாவா வென்று நிர்ணயிக்க முடியாமல் திண்டாடுகிறது. என்றாலும் வெனிட்ஸா பகுதிக்கு ஜெர்மன் படைகள் பக்க பலமாக வந்து கொண்டிருக்கின்றன. இங்குள்ள ஜெர்மன் படைத் தலைவர் பான் மான்ஸ்டீன். இந்தப் படைகள் பக் ஆற்றங் கரைகளையும், ஒடெஸா-வார்சா ரயில்வேயையும் பாதுகாக்க வேண்டும். இதைப் பொருத்துத் தான், ருமேனியாவின் பாதுகாப்பு அமைந்திருக்கிறது. உக்ரேய்னின் தென் பகுதியில் டினீப்பர் ஆற்றின் முகத்துவாரம் வரையிலும் ஜெர்மானியர்கள் மகா பிடிவாதத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இது தான் மகா முக்கியமான கட்டம். போலந்து எல்லைப் புரத்தைப் பாதுகாப்பதைவிட, ருமேனியாவைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம். ருமேனியாவைப் ஜெர்மனி இழந்து விட்டால், பால்கன் நாடுகளிலேயே ஜெர்மனியின் கை சளைத்துப் போகும். அப்போது துருக்கியும் கூட போரில் ஈடுபட நேரிடினும் நேரலாம்.

ஆனால் 'ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடே போவானா?' காரணமில்லாமலா செம்படைகள் போலந்து எல்லைக்குள் புகுந்து விட்டன? இதை ஜெர்மன் படைகள் தடுக்கக் கூட வில்லையானால், மேற்கு நோக்கிப் போகும் படைகள் தெற்கே திரும்பி, டான்னபோல், ல்வோக் முதலிய இடங்களைக் கைப்பற்றக் கூடும். பிறகு ஒடெசா லைனையும் தாக்கக் கூடும். இந்தப் படைகள் தாம் முன்னேறிப் போகும் போதே, விசிறி போலப் பிரிந்து தாக்கி வருவதில் கை தேர்ந்தவை. இந்த முறையை இங்கே அவர்கள் கையாண்டால், மான்ஸ்டீனின் போக்கு வரவு சாதனங்களெல்லாம் சின்னா பின்னப்பட்டு விடும். பிரிபெட் சதுப்பு நிலங்களின் தென் பகுதியில், ரஷ்யப் படைகள் வெகுவாக முன்னேறின. சுமார் 80 மைல்கள் அகலத்திற்குத் தம் படைகளை நடத்திக் கொண்டு, அந்த சோவியத் படைத் தலைவர் கோவெல் என்னும் முக்கியமானதோர் ரயில்வே ஜங்ஷனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார். அதற்குத் தெற்கேயும் உள்ள ரோவ்னா வரையிலுங் கூட, எட்டிக் கொண்டிருக்கிறார்.

சென்ற வாரம் கியெபுக்குத் தென் மேற்கே செம்படைகள் முன்னேறிப் போவதன் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. அன்றியும் பக் ஆற்றிற்கும் ஒடெசா ரயில்வே லைனிலுள்ள ஷ்மெரிங்காவிற்கும் அதனால் பாதகம் நேருமென்றும் குறிப்பிட்டோம். ஜெனரல் வாட்டுட்டின் டினீப்பர் ஆற்றின் முகத்துவாரத்திலிருந்து நெருக்க ஆரம்பித்தால், ஜெர்மன் படைகளுக்கு ஆபத்துண்டாகக் கூடுமென்று உணர்ந்த பான் மான்ஸ்டீன், அந்தப் போர் முனைக்கு ஏராளமான ஜெர்மன் படைகளை அனுப்பி வைத்தார். இந்தப் படைகள் பக் ஆற்றையும் ஷ்மெரிங்காவுக்குப் போகும் பாதையிலுள்ள வென்னிட்ஸா என்னும் ரயில்வே ஜங்ஷனையும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் ரஷ்யர்களோ வென்னிட்ஸாவை வளைந்து கொண்டிருக்கிறார்கள். நெமிரோப் என்னுமிடத்தில் பக் ஆற்றங் கரையை யடைந்து விட்டார்கள். என்றாலும் இங்கே விரைவில் செம்படைகள் முன்னேறக் கூடுமென்று சொல்ல முடியாது. செம்படைகள் ஷ்மெரிங்காவை அடையும்படி விடாது ஜெர்மானியர்கள் கடும் போராடுகிறார்கள். டினீப்பர் ஆற்றுப் பகுதியில் மான்ஸ்டீன் படைகள் மிகக் குறுகியதோர் பகுதியில் சிக்கிக் கொண்டு தவிக்கின்றன. நிகோபோலுக்கு வடக்கே, டினீப்பர் ஆற்றை யடுத்துள்ள ஜெர்மன் அரண்கள், கனெப் என்னுமிடத்திலிருக்கின்றன. இந்த ஊர் கியெபுக்கும் செர்க்காசிக்கும் இடையிலிருக்கிறது. ஸ்மேலாவுக்கும் ஒடெசாவுக்கும் ஓடும் ரயில்வே லைனை கூமானுக்கு அருகில் ரஷ்யப் படைகள் வெட்டி விட்டன. இந்தப் பகுதியில் ஜெர்மன் படைகள் மிகுந்த ஆபத்தான நிலைமையில் தான் இருக்கின்றன.

இதன் பிரதிபலன் பல்கேரியாவையும் ருமேனியாவையுங் கூட பாதிக்கிறது. அமெரிக்க விமானங்களும், பிரிட்டிஷ் விமானங்களும் தம்மைத் தாக்கக் கூடுமென்று எதிர்நோக்கி சோபியாவிலுள்ள பொது மக்கள் அனைவரும் வெளியேறிவிட வேண்டுமென்று பல்கேரிய அரசாங்கம், ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறது. அன்றியும் யாரேனும் கொள்ளை யடித்தால், அங்கேயே சுட்டுத் தள்ளப்படுவார்கள் என்று மற்றொரு கட்டளையும் பிறந்திருக்கிறது. ருமேனிய

தலைநகரான புகாரெஸ்டும் கூடக் காலி செய்யப்படுவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ட்ரான்ஸ்னிட்ஸ்ட்ரியா என்னும் மாகாணந் தான் பெரும் பீதிக்கு உள்ளாகி யிருக்கிறது. இது டினீஸ்டர் ஆற்றிற்கும் பக் ஆற்றிற்கும் இடையேயுள்ள நாற்கோணமான பகுதி. இங்கே தான் ஒடெஸா என்னும் நகர மிருக்கிறது. தான் "போல்ஷ்விக்கர்கள் மீது நடத்தும் புனிதமான போராட்டத்திற்கு உதவி" செய்வதற்கு ஈடாக இந்த மாகாணத்தை ஹிட்லர் ருமேனியாவுக்குக் கொடுத்தார். ருமேனிய முதன் மந்திரியின் பெயர் ஆன்டனெஸ்கு. இந்த மாகாணத்திற்கு கவர்னராக 1941-ம் வருஷத்தில் இவர் ஒரு பேராசிரியரை நியமித்தார். அவருடைய பெயர் பேராசிரியர் அலெக்சினு. இவர் நாஜிகளின் கையாளாகத் தானிருந்தார். உண்மையிலே நிர்வாகத்தை நடத்தியவர்கள் ஜெர்மானியர்கள் தான். இங்கே கூட்டுப் பண்ணை முறை போய், தனிப் பண்ணை முறை ஏற்பட்டது. ஏனென்றால், அப்போது தான் ருமேனியப் படைகள் தம் மனம் போல் தானியங்களைக் கொள்ளையடிக்க கூடும். எல்லா வியாபாரங்களையும் ருமேனியர்களும் ஜெர்மானியர்களும் கைபற்றிக் கொண்டார்கள். அங்கே மக்கள் படும் அவதி சொல்லுந்தரமல்ல. ரஷ்யப் போராட்டம் இந்த நிலைமையில் ஓங்கித் தான் இருக்கிறது.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

யுத்தம் முடிந்த பிறகு, போலந்தின் கிழக்கு எல்லைப் புரம் எதுவா யிருக்க வேண்டு மென்பதுபற்றி பெருத்த கருத்து வேற்றுமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. "நியூஸ் கிரானிகிள்" என்னும் பத்திரிகையில் **வெர்னன் பார்ட்லெட்** என்பவர் கூறியுள்ள கருத்துக்கள் பிரிட்டிஷ் பொது மக்களின் போக்கை அறிவிக்கும். அதில் அவர் கூறுவதாவது :—

"யுத்தம் முடிந்த பிறகு, தற்போதைய போலிஷ் அரசாங்கம் மீண்டும் போலந்துக்குப் போக வேண்டுமென்று விரும்பினால், சோவியத் அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டால் மட்டுந் தான் போக முடியுமென்பதை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் ஜெர்மானியர்களிட மிருந்து போலந்து நாட்டை மீட்டவர்கள் சோவியத் படையினர் தான்.... .... நிற்க, போலந்தைக் கசக்கிப் பிழிந்து தமக்கு எவ்வளவு சலுகைகளைப் பெற்றுக் கொண்ட போதிலும், சோவியத் அரசாங்கம், ஒரு விஷயத்தை மட்டும் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, சோவியத் யூனியனின் பாதுகாப்பை முன்னிட்டும், உலக சமாதானத்தை நிலை நாட்ட வேண்டியதை முன்னிட்டும், யுத்தம் முடிந்த பிறகு, பிரிட்டனோடும் அமெரிக்காவோடும் உண்மையான கூட்டுறவோடு இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்."

ஜனவரி மாதம் 5-ம் தேதி லண்டனில் சரண் புகுந்திருக்கும் போலந்து அரசாங்கம், ஒரு அறிக்கையை வெளியிட்டது. அது முதல், இந்தப் பிரச்சினை வெகுவாக அடிபட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அறிக்கையில், 1939-ம் வருஷத்தி லிருந்து ரஷ்ய-போலந்து எல்லையைக் கடந்து சோவியத் படைகள் முன்னேறிப் போனதனால் ஏற்பட்டதோர் நிலையைக் குறித்து, குறிப்பிட்டிருக்கிறது. மேலும், போலந்து குடியரசு அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உள்ள உரிமைகளையும் நன்மைகளையும் பாதிக்கத் தக்க முறையில் சோவியத் அரசாங்கம் நடந்து கொள்ளாதெனத் தாம் எதிர்பார்ப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது.

உடனே நிலைமையைத் தெளிவு படுத்தும் பொருட்டு சோவியத் அரசாங்கம் ஒரு அறிக்கையை ஜனவரி மாதம் 10-ம் தேதி வானொலி மூலம் வெளியிட்டது. அதில், போலந்து-ரஷ்ய எல்லைப்புரம் என்று போலந்து அரசாங்கம் அறிக்கையில் கூறியிருப்பது தவறு என்றும், மேல உக்ரேய்ன் பகுதியிலுள்ள மக்களின் சம்மதியின் பேரில் போலந்து-ரஷ்ய எல்லைப்புரம் எது என்று சோவியத் அரசாங்கம் நிர்ணயித்திருப்பதாகவும் கூறுகிறது. மேலும், ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட முறையில், பொது மக்களின் கருத்தை இதுபற்றி உணரவேண்டி, மேல உக்ரேய்னிலும் மேல பைலோ-ரஷ்யாவிலும் 'ஓட்' எடுத்ததைக் கொண்டு தான் இந்த எல்லை வகுக்கப்பட்டது என்றும், அந்த அறிக்கை கூறுகிறது.

இதன் பயனாக உக்ரேய்னியரை மிகப் பெரும்பாலுங் கொண்ட மேல உக்ரேய்னையும், பைலோ ரஷ்யர்களையே மிகப் பெரும்பாலுங் கொண்ட பைலோ ரஷ்யாவையும் சோவியத் அரசாங்கத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதனால், போலந்தின் உரிமைகள் பாதிக்கப்படவில்லையென்றும், ஆனால், போலந்திலுள்ள மக்களுக்கும், அதற்கடுத்துள்ள உக்ரேய்னியர்களுக்கும், பைலோ-ரஷ்யர்களுக்கும், ரஷ்ய மக்களுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட இடமுண்டாகு மென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

கர்ஸான் லேன் போலந்து எல்லை: சோவியத் கருத்து.

ஜெர்மானியர்கள் வயப்பட்ட நாடுகளை சோவியத் படைகள் மீட்கும். அப்போது போலந்தும் மீட்சி பெற்று பலமுள்ள சுதந்தர நாடாக அமையும் என்னும் கருத்தைக் கொண்டு சோவியத் அரசாங்கத்தார் விடுத்த அறிக்கையில் குறிப்பிடுவதாவது :—

"உக்ரேய்னையும் பைலோரஷ்யாவையும் போலந்தோடு சேர்த்து விடுவதனால் போலந்து மீட்சி பெற்றதாகாது; ஆனால், ஜெர்மானியர் கவர்ந்து கொண்ட நாடுகளை மீட்டு அதற்குக் கொடுப்பதன் மூலந் தான், மீட்சி பெற்றதாகும்............1939-ம் வருஷத்திய எல்லைப்புரம் மாறக் கூடியது என்று தான் சோவியத் அரசாங்கத்தார் கருதுகிறார்கள். மாறுதல்களைப் புகுத்தலாம். அதன் பயனாக, போலந்து மக்கள் பெருவாரியாக வசிக்கும் பகுதிகள் போலந்துக்குக் கொடுக்கப்பட்டால், போலந்துக்கு நன்மையுண்டு. அப்படியானால் சோவியத்-போலந்து எல்லைப்புரம் ஏறக்குறைய 'கர்சான் லைன்' என்று சொல்லப்படும் எல்லையை யடுத்துப் போகும். இந்த எல்லைப்புறத்தை 1919-ம் வருஷத்திலேயே நேச நாடுகளின் 'சுப்ரீம் கௌன்சில்' ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த எல்லைப்படி உக்ரேய்னும் பைலோ ரஷ்யாவும் சோவியத் யூனியனைச் சேரும். போலந்தின் மேற்கு எல்லைபுரப் பகுதிகளை மீட்டு போலந்துக்குக் கொடுக்க வேண்டும். இந்தப் பகுதிகள் போலந்தைச் சேர்ந்திருந்தவை. அவற்றை ஜெர்மானியர்கள் கைப்பற்றி யிருக்கிறார்கள். இவற்றை மீட்டு போலந்துடன் சேர்க்காவிட்டால், போலந்து மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ முடியாமற் போய்விடும். அன்றியும் அவற்றை மீட்டு போலந்துடன் சேர்ப்பதனால், பால்டிக் கடலில் நேர்முகமாக சம்பந்தம் வைத்துக் கொள்ள அவர்களுக்கு இடமேற்படும்.

இதற்கிடையில், பொது எதிரியோடு போலந்து மக்களும் சோவியத் மக்களும் போராடுவதில் நெருங்கிய நட்புரிமைக் கொண்டிருப்பதைப் பொருததுத் தான், அந்த இரு நாடுகளின் நன்மையும் அமையும்."

3 எல்லைகள் போலந்து அரசாங்கம் கூறுவது.

இந்த எல்லைப்புரப் பிரச்சினையை சரித்திர ஆதாரங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்வது பொருத்தமாகும். ஏனென்றால் இது யுத்த காலப் பிரச்சினை மட்டுமல்ல; எல்லைப்புரத் தகராறுகள் நேருவதற்கு இடமில்லாது அமைய வேண்டும். இதை நிர்ணயிக்க வேண்டுமானால், அந்தந்த இனத்தாரை ஒன்று சேர்த்துவிட வேண்டும். ஒரே பகுதியில் வசித்து, தம் இனத்தாரிடம் பற்றுக் கொண்டுள்ளவர்களை அந்தந்தப் பகுதியிலேயே சேர்த்துவிட வேண்டும். மூன்று வகை ரஷ்யோ-போலிஷ் எல்லைப்புரங்களை வகுக்கலாம். அதாவது, (1) ரிகா லைன். ரிகா என்னுமிடத்தில் 1921-ம்வருஷம் மார்ச்சு மாதம் 18-ம்தேதி ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு, இந்த எல்லைப்புரம் ஏற்பட்டது. யுத்தம் ஆரம்பமாவதற்கு முன், இதுதான் எல்லைப்புரமாயிருந்தது. (2) தற்காலிக கர்சான் எல்லைப்புரம். இது 1921-ம்வருஷம் ஆகஸ்டு மாதம் ஏற்பட்டது (3) 1939-ம் வருஷம் வகுக்கப்பட்ட ரிப்பன்ட்ராப்-மலோடோப் லைன். 1939-ம் வருஷத்திய எல்லைப்புரம், தமக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று போலந்து அரசாங்கம் கோருகிறது. ஆனால், யுத்தத்திற்குப் பிறகு, கர்சான் லைன் எல்லைப்புரம் ஒப்புக் கொள்ளப்பட வேண்டு மென்று சோவியத் அரசாங்கம்

கூறுகிறது. 1939-ம் வருஷத்திய எல்லைப்புரந் தான் ரிகா லைன். ரஷ்ய படேவியன் எல்லைப்புரத்திலுள்ள ட்வைனு ஆற்றை யொட்டித் தெற்கு நோக்கி ஸ்ப்ரூயெஸ் வரை இது போகிறது. அன்றியும் அந்த ஆறு டினிஸ்டர் ஆற்றில் சங்கமமாகிற வரை, அந்த லைன் அமைந்திருக்கிறது. இந்த எல்லையை ரிப்பன்ட்ராப்-மலோடோப் ஒப்பந்தப்படி 150,200 மைல்களுக்கு மேற்கே தள்ளிப் போட்டார்கள். 1921-ம் வருஷம் போலந்தும் ரஷ்யாவும் சுயேச்சை நாடுகள் என்னும் முறையில், ரிகாவில் செய்து கொண்ட ஒப்பந்தந்தான் நேர்மையானது என்று போலந்து அரசாங்கம் கோருகிறது. 1923-ம் வருஷம் கலீஷியாவை போலந்து ஆண்டதையும் நேச நாடுகள் அங்கீகரித்தன. ரஷ்யாவை ஜெர்மனி தாக்கிய பிறகு, லண்டனில் சரண் புகுந்திருந்த போலந்து அரசாங்கத்தோடு சோவியத் அரசாங்கம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தபடி 1939-ம் வருஷம் சோவியத் ஜெர்மன் அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்சம் ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல. 1941-ம் வருஷம், இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட காலத்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் போலந்து அரசாங்கத்தாருக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். அதன்படி, 1939-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகு, அதாவது ஜெர்மன் படையெடுப்பிற்குப் பிறகு எல்லைப்புர மாறுதல்கள் நிகழ்ந்தால், தாம் அதை அங்கீகரிக்க முடியாது என்று கூறியிருந்தது.

சோவியத் போக்கு கர்சான் லைன்.

ரிகா ஒப்பந்தத்தை எற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைமையில் ரஷ்ய அரசாங்கம் இருந்தது. எனெனில் போலந்து வெற்றி கொண்ட வீரப் பிரதாபத்தோடிருந்தது. ஆகவே, அதன்படி வகுக்கப்பட்டதோர் எல்லைப்புரம் நிரந்தரமானதாக அமைய முடியாது; அந்த ஒப்பந்தம் கொஞ்சமும் செல்லத் தகாதது. அன்றியும் கலைகள் சம்பந்தமாகப் பூரண சுயேச்சை உக்ரேய்னியர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்னும் நிபந்தனையின் பேரில் தான், இந்த ரிகா ஒப்பந்தத்தை நேச நாடுகளும் ஒப்புக்கொண்டன. இந்த நிபந்தனைகளின்படி போலந்து நடந்து கொள்ளவில்லை. அதாவது கலை சம்பந்தமான பூரண சுயேச்சையை உக்ரேய்னியர்களுக்கு போலந்து அரசாங்கம் வழங்கவில்லை.

கர்சான் தான் எழுதிய குறிப்பில், போலந்து மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கும், வெள்ளை ரஷ்யர்களும் உக்ரேய்னியரும் வசிக்கும் பகுதிக்கும் இடையே ஒரு எல்லையைக் கண்டு எழுதினார். இந்த எல்லைப்புரத்தை, நேச நாடுகள் 1920-ல் ஒப்புக் கொண்டன. எறக்குறைய இதே எல்லைப்புரம் தான், 1939-ம் வருஷம் ரிப்பன்ட்ராப்-மலோடோப் ஒப்பந்தத்தாலும் எற்பட்டது.

1939-ம் வருஷத்தில் எற்பட்ட சோவியத்-ஜெர்மன் ஒப்பந்தம் செல்லுபடியாகாதென்று 1941-ம் வருஷம் ரஷ்ய அரசாங்கம் கூறிவிட்டதனாலே, யுத்தத்திற்கு முன்பிருந்த எல்லைப்புரத்தை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று போலந்து அரசாங்கம் கூறுகிறது. ஒரு விஷயம் இங்கே குறிப்பிடத் தக்கது. பங்கு போட்டுக் கொள்ளப்பட்டதில் தனக்குக் கிடைத்த பகுதியை சோவியத் அரசாங்கம் விட்டுக்கொடுத்துவிட வேண்டுமென்று 1941-ம் வருஷத்திய சோவியத்-போலீஷ் ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. பங்கு போட்டுக் கொள்ளப்பட்டதில், ஜெர்மானியர்களுக்குக் கிடைத்த பங்கைத் தான் ஒப்புக் கொள்ள ரஷ்யர்கள் மறுத்தார்கள். ஜெர்மன் படையெடுப்பிற்குப் பிரகு நிகழக் கூடிய எல்லைப்புர மாறுதல்களைத் தாம் அங்கீகரிக்க முடியாதென்று, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வாக்குறுதி கொடுத்தது உண்மை தான். ஆனால், இதைக் கொண்டு ஒரு புதிய எற்பாட்டைச் செய்யக் கூடாதென்று அர்த்தமல்ல. ஐரோப்பாவிலுள்ள மக்கள் தாம் விரும்பும் முறையில் தம் அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்னும் அட்லாண்டிக் பிரகடனத்தின் தத்துவத்திற்கு இசைந்ததாக இருக்கிறது ரஷ்யர்களின் போக்கு.

உக்ரேய்னியர்களும் ரஷ்யர்களும்.

1939-ம் வருஷம் உக்ரேய்ன் பகுதியை சோவியத் அரசாங்கத்தோடு சேர்த்துக் கொள்ளுமுன்னதாக 'ஓட்' மூலம் பொது மக்களின் கருத்தை உணர்ந்து கொண்ட பிறகு தான் சேர்த்துக் கொண்டனர். 1921-ம் வருஷத்திலேற்பட்ட ரிகா ஒப்பந்தபடி அமைந்த எல்லைப்புரத்திற்கு வெளியே தான் தாம் இருக்க விரும்புவதாக அங்கே பெருவாரியாக வசிக்கும் உக்ரேய்னியரும் ரஷ்யர்களும் தம் ஓட்டு மூலம் தம் கருத்தை வெளியிட்டார்கள். பல வருஷங்களுக்கு முன்பே, 1921-ம் வருஷத்திய ரிகா ஒப்பந்தபடி போலிஷ் எல்லைப்புரம் நிர்ணயிக்கப்படும் முன்பே இந்தத் தகராறுக்குட் பட்ட பகுதியில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையை போலந்து அரசாங்கம் தொகுத்தது. அதினின்று அங்கே 46 சத விகிதம் போலந்து மக்களும், 23 சத விகிதம் வெள்ளை ரஷ்யர்களும், 17 சத விகிதம் உக்ரேய்னியர்களும், 10 சத விகிதம் யூதர்களும் வசித்ததாகத் தெரிந்தது. 1939-ம் வருஷம் போலந்து மக்கள், மேலும் மேற்கு நோக்கிப் போனதன் பயனாக, இந்தப் பகுதியில் அவர்களுடைய எண்ணிக்கை குறையலாயிற்று. போலந்து மக்கள் பெரும் மிராசுதார்களாகவும், உக்ரேய்னியரும் ரஷ்யரும் அவர்களுடைய பண்ணையாட்களாகவும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பகுதியை ஜெர்மானியர்கள் கைப்பற்றிய பிறகு, நடுத்தரமான நிலைமையில் அங்கு வசித்து வந்த யூதர்களை அடியோடு அழித்து விட்டார்கள். போலந்து மக்களில் பெரும்பாலோரை ஜெர்மனியிலுள்ள தொழிற் சாலைகளில் வேலை செய்யும்படி அனுப்பினார்கள். ஆகவே, இன்று அங்குள்ள நிலைமையில் ரஷ்யர்களும் உக்ரேய்னியர்களும் தான், வெகுவாக வசிக்கிறார்களென்று தெரிகிறது.

இந்த முக்கியமான விஷயந்தான் இந்தத் தகராறில் இது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதோர் விஷயம். எனென்றால் இந்த விஷயத்தை முடிவுகட்ட வேண்டுமானால், சட்ட சம்பந்தமான விவாதங்களைக் கொண்டு முடிவு கட்ட இயலாது. போலந்திலுள்ள உக்ரேய்னியர்கள் இந்தத் தகராறைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்று ஆராய்வது முக்கியமாகும். 1921-ம் வருஷம் ரிகா எல்லை வகுக்கப்பட்ட காலத்தில் போலந்து மக்களையோ ரஷ்ய மக்களையோ கலந்து அவர்கள் விருப்பப்படி வகுக்கப்படவில்லை. ஆனால் ரஷ்யர்களுக்கு ஒரு புகலுண்டு. அதாவது, 1939-ம் வருஷம் எடுக்கப்பட்ட ஓட்டில், போலந்திலுள்ள உக்ரேய்னியர்கள், சோவியத் எல்லையிலோ, கிழக்கு உக்ரேய்னிலோ உள்ள தம் தம் சகோதரர்களுக்கும் தமக்கும், இனத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும், கலைத் துறையிலும் ஒற்றுமை உண்டாகையால், அவர்களோடேயே சேர்ந்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார்கள். உக்ரேய்ன் மக்களின் சரித்திரத்தைப் படித்தால், அங்குள்ள மக்களின் மன நிலை, இந்தத் தகராறு சம்பந்தமாக, எப்படி யிருக்கிறதென்று விளங்கும்.

உக்ரேய்ன் சரித்திரம் : இனத்தகாரறும் கலைத்தகாரறும்.

இப்போது உக்ரேய்ன் என்று வழங்கப்படும் பகுதி முழுதும், 1667-ம் வருஷம் வரை போலிஷ்-லிதுவேனிய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்திருந்தது. அந்த வருஷம் ஆண்ட்ருசோவா என்னுமிடத்தில் ஒரு ஒப்பந்தம் நடந்தது. அதன்படி, டினீப்பர் ஆற்றுக்குக் கிழக்கே ரஷ்யாவுக்குப் போகும் பகுதி ஒரு பாகமாகவும், போலந்துக்குப் போகும் பகுதி மற்றொரு பாகமாகவும், ஆக இரண்டு பாகங்களாக வகுக்கப்பட்டது. இந்த இரண்டு பகுதியினரும் மதக் காரணத்தாலும் பொருளாதாரக் காரணத்தாலும் அதுவரை போட்டுக் கொண்டிருந்த சண்டை, இந்த ஒப்பந்தத்தினால் முடிவடைந்தது. அதாவது வைதீகப் போக்குள்ள உக்ரேய்னியரை போலந்துக்காரர்கள் ரோமன் கத்தோலிக் மதத்திற்கு மாற்ற பலவந்த முறைகளைக் கையாண்டார்கள். பொருளாதாரத் துறையிலும் உக்ரேய்னியர்கள் அடிமை நிலைமை யடைந்து விட்டார்களென்று சொல்லலாம். இப்படிப்பட்ட நிலைமையை எதிர்த்து 1654-ம் வருஷம் அங்கே ஒரு கலவரம் எற்பட்டது. அப்போது காசத்-உக்ரேய்னியத் தலைவரா யிருந்த பாக்டன் சிமெல்னிக்கி என்பவர், தன்னையும் தன் ஆளுகைக்குட்பட்ட உக்ரேய்னியர்களையும் ரஷ்ய சக்கிரவர்த்தியான ஜாருடைய ஆட்சிக்கு உள்ளாக்கிக் கொண்டார். ரஷ்யாவுக்கும் போலந்துக்கும் போர் நடந்தது. இதற்குப் பிறகு 13 வருஷங்கள் கழித்துத் தான் ஆண்ட்ருசோவா வென்னு மிடத்தில், முற்கூறியதோர் ஒப்பந்தம் எற்பட்டது. அப்போது டினீப்பர் ஆற்றுக்குக் கிழக்கே யிருந்த உக்ரேய்ன் பகுதி, ரஷ்யாவுக்குக் கிடைத்தது; மற்ற பகுதிகள் 1793-ம் வருஷம் இரண்டாவது பாகஞ் செய்து கொண்ட முடிவின் பயனாகக் கிடைத்தது.

உக்ரேய்னியர்களுக்கு போலந்து மக்கள் மீது அன்பு கிடையாது. ஆனால், ரஷ்யாவின் ஆட்சியின் கீழாவது சமாதானத்தோடும் திருப்தியோடும் வாழ்ந்து வந்தார்களா? கிடையாது. மகா பீட்டர், மகா கதரீன் ஆட்சி காலங்களில் நசுக்கப்பட்டது போலவே தான், அப்போதும் நசுக்கப் பட்டார்கள். ஆகவே, அந்த நிலையை அவர்கள் விரும்ப வில்லை. ரஷ்யாவிலும் போலந்திலும் ஒரு தேசீய ஸ்தாபனத்தை எற்படுத்திக் கொண்டார்கள். தாம் ஒரு தனி நாட்டினராக வாழ வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம்.

1917-ம் வருஷம் ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டது. அது சமதர்ம நாடாக மாறியது. 1917-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி வெளியான அரசாங்கக் கட்டளைப்படி உக்ரேய்னுக்கு சுயாட்சி வழங்கப்பட்டது. புதிய சோவியத் யூனியனில் உக்ரேய்னும் ஒரு பகுதியாகச் சேர்ந்து கொண்டது.

1918-ம் வருஷம் உக்ரேய்ன் முழுவதையும் ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். ஜெர்மனி சிதைந்த பிறகு போலந்து மேற்கு உக்ரேய்னைக் கைப் பற்றிக் கொண்டது. பிறகு போலந்துக்கும் ரஷ்யாவுக்கும் போர் மூண்டது. கடைசியாக ரிகா ஒப்பந்தம் 1921-ம் வருஷம் ஏற்பட்டது.

பலவந்தமாக போலந்தோடு இணைக்கப்பட்டிருக்கா விட்டால், மேற்கு உக்ரேய்ன ஒரு சுயேச்சை நாடாக இருந்திருக்கும் அல்லது, சோவியத் யூனியனோடு சேர்ந்திருந்திருக்கும். ஏனென்றால், ருஷ்யர்களும் உக்ரேனியர்களும் ஒரே இனத்தவர்கள். அவர்களுடைய கலைகளும் ஒன்று. ஆகவே, வேண்டா வெறுப்பாகத் தான் போலந்து ஆட்சியை உக்ரேய்ன் ஒப்புக் கொண்டது என்று சொல்ல வேண்டும். 1939-ம் வருஷம் உக்ரேனிய மக்களின் கருத்தை அறிய வேண்டி ‘ ஓட் ’ எடுத்த போது, உக்ரேய்ன் செம்படைகளின் ஆதிக்கத்திற் குட்பட்டிருந்தது. ஆகவே தான், சோவியத் அரசாங்கத்திற்குச் சாதகமாக உக்ரேனியர்கள் ‘ ஓட் ’ கொடுத்தார்கள் என்று காரணங் கூறலாம். அது வல்ல காரணம். தாம், போலந்து அரசாங்க ஆட்சியிலும், சோவியத் ஆட்சியிலும் வாழ்ந்து வந்ததற்குள்ள வேற்றுமையை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

போலந்து ஆளுகையிலும் சோவியத் ஆளுகையிலும்.

1920-ம் வருஷத்தில் மேற்கு உக்ரேய்னிலுள்ள உக்ரேய்னியப் பள்ளிக் கூடங்களின் எண்ணிக்கை 3602-ஆக உயர்ந்தது. ஆனால், 1925 ல் போலந்து ஆட்சியில் இது 1074 ஆகக் குறைந்தது. நாளாக ஆக நிலைமை மிகவும் சீர்கெட்டது. 1932-ம் வருஷத்தில் 804 உக்ரேய்னியப் பள்ளிக் கூடங்கள் தான இருந்தன வென்று அரசாங்க அறிக்கையே கூறுகிறது. இவற்றில் 7 பள்ளிக்கூடங்களுக்கு மட்டுந் தான் அரசாங்கம் ஆதரவளித்தது, 50 லட்சம் மக்களைக் கொண்ட உக்ரேய்னில் 15 செகண்டரி பாடசாலைகள் மட்டுந் தான் இருந்தன. அவையும் அரசாங்க ஆதரவின்றி நடைபெற்று வந்தன ! 1939-ம் வருஷம் போலிஷ் உக்ரேனியர்கள் சோவியத் யூனியனைச் சேர்ந்தார்கள். 1940-ம் வருஷத்தில் மேற்கு உக்ரேய்னில் 6,791 ஆரம்பப் பள்ளிக்கூடங்களிருந்தன. அவற்றுள் 5,596 உக்ரேய்னியப் பள்ளிக்கூடங்கள், 922 போலிஷ் பள்ளிக்கூடங்கள் ; 131 யூதக் பள்ளிக்கூடங்கள் ; 40 செக் பள்ளிக்கூடங்கள் ; 9 ஜெர்மன் பள்ளிக்கூடங்கள் ; 30 கலப்புப் பள்ளிக் கூடங்கள்.

சோவியத் யூனியனில் ஏற்கெனவே சேர்ந்திருந்த உக்ரேனியர்களைப் பற்றி சில விவரங்களை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். 1933-ம் வருஷத்தில் வெள்ளை ரஷ்யாவிலும் உக்ரேய்னிலும் உள்ள மொத்த ஜனத் தொகையில் ஆறில் ஒரு பங்குக்கு மேலாகவே ஆரம்பப் பள்ளிக் கூடங்களிலும் செகண்டரி பள்ளிக்கூடங்களிலும் பயின்று கொண்டு வந்தனர். இவர்களில் 100-க்கு 1 பங்குக்கு அதிகமாகவே கல்லூரிகளிலும் சர்வகலா சாலைகளிலும் பயின்று வந்தார்கள். இந்தக் கல்வி முறையின் முக்கியமான அம்சம் என்ன வென்றால், அந்தந்த நாட்டு மொழியிலேயே கல்வி போதிக்கப்பட்டு வந்தது தான்.

1930-ம் வருஷம் போலந்து ஆட்சியை எதிர்த்து உக்ரேய்னியர் கலகம் செய்த போது, கடுமையான முறைகளைக் கொண்டு அந்தக் கலகத்தை ஒடுக்கினார்கள். ஆகவே, 1939-ம் வருஷம் போலிஷ் உக்ரேய்னில் செம்படைகள் புகுந்தபோது, தமது ரட்சகர்கள் என்று அவர்களை உக்ரேய்னியர் வரவேற்றது ஒரு வியப்பல்ல.

உக்ரேய்னுடைய பழைய சரித்திரத்தைக் கொண்டு பரிசீலனை செய்து பார்ப்போம். இன வழியையும் கலை வழியையும் ஆதாரங்களாகக் கொண்டு பார்ப்போமானால், 1939-ம் வருஷம் ரஷ்யா கைப்பற்றிய நாடுகளில், போலந்து வாசிகள் அல்லாதவர்களே பெரும்பாலும வசிக்கிறார்கள் என்பது விளங்கும். போலந்து வாசிகளுக்கும் இவர்களுக்குமுள்ளதை விட, சோவியத் யூனியனுக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு அதிகம். அன்றியும் 1939-ம் வருஷம் செம்படைகள் கைப்பற்றிக் கொண்ட பகுதிகள், போலந்தின் எதிர் கால முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவையுமல்ல.

இவற்றை யெல்லாம் கொண்டு பரிசீலனை செய்வோமானால், கர்ஸான் லைனை எல்லையாகக் கொள்ளலாமென்று சோவியத் அரசாங்கம் போலந்துக்குச் சொல்வது நியாயமாகத் தெரிகிறது. இது பற்றி பிரபல அமெரிக்க வானொலி விமர்சனக் காரரான வில்லியம் ஷிரர் கூறுவதாவது :—

“ இது போலந்துக் காரர்களுக்கு நேர்மையாகக் கொடுக்கப்படுவதாகும். கிழக்கு ரஷ்யாவை இழந்து விடுவதானால் ஜெர்மானியர்களுக்கு மகா கடுங் கோபம் வரத் தான் செய்யும். இவர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளை யெல்லாம் தம் நாட்டோடு சேர்த்துக் கொண்டார்கள். அந் நாடுகளின் மக்களை, குறிப்பாக போலந்து மக்களை மகா கொடுமையாக நடத்தினார்கள். ஆகவே, ஜெர்மனியரிடம் அவர்களுக்கு வெறுப்புத் தோன்றி விட்டது. இந்த ஏற்பாட்டின்படி, போலந்துக்கு பால்டிக் கடலை யடைய வழி ஏற்பட்டது. அன்றியும் போலந்துக்கும் ஜெர்மனிக்கும் போக்கு வரவு பாதை சம்பந்தமாக அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்த தகராறுகளுக்கும் இடமில்லாது போய் விடும்.”

தகராறு முற்றுகிறது

எல்லைப்புர சம்பந்தமான தகராறு முற்றுகிறது. ஜனவரி மாதம் 15-ம் தேதி போலந்து அரசாங்கத்தார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். அந்த அறிக்கைக்குப் பதிலாக சோவியத் அரசாங்கத்தார் 11-ம் தேதி விடுத்த பிரகடனத்தைப் பரிசீலனை செய்த பிறகு தான், இந்த அறிக்கை வெளிவந்திருக்கிறது. இது கூறுவதாவது :—

“ போலந்து குடியரசு நாடு சம்பந்தமாக இது வரை முடிந்த அல்லது முடியப் போகும் எந்தத் தனிக் கட்சியாரின் முடிவுகளையோ, சாதித்த செயல்களையோ போலந்து அரசாங்கம் ஒப்புக் கொள்ள முடியாது. ஆனால், நேர்மையான முறையில், இருதரத்தாரும் ஒப்புக் கொள்ளத் தக்கபடி, ஒரு போலிஷ் சோவியத் ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென்று மனதார விரும்புவதாக அடிக்கடி கூறிக் கொண்டு வந்திருக்கிறது.”

இது பற்றி போலந்துடனும் சோவியத் அரசாங்கத்துடனும் பிரிட்டிஷ் அமெரிக்க அரசாங்கங்களின் உதவியால் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று போலந்து அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது. இந்தப் பிரகடனத்திற்கு சோவியத் அரசாங்கத்தின் அதிகாரத்தின் பேரில் ஒரு பதில் ஜனவரி 17-ம் தேதி வெளி வந்திருக்கிறது. இந்த பதிலில், கர்ஸான் லைனைப் பற்றி அடியோடு போலந்து அரசாங்கம் தன் அறிக்கையில் குறிப்பிடாமலே விட்டுவிட்டதனால், அதை எல்லைப்புரமாகக் கொள்ள அது மறுக்கிறது என்று தான், பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது, என்று குறிப்பிடுகிறது. அன்றியும் அரசியல் தொடர்பு அற்றுப் போயிருக்கும் ஒரு அரசாங்கத்தோடு தாம் உத்தியோக முறையில் எவ்வித சமரசப் பேச்சும் நடத்தத் தக்க நிலையில் தாம் இல்லை யென்றும் தெரிவிக்கிறது.

இந்த நிலைமையில் தான் சோவியத் அரசாங்கத்திற்கும் போலந்துக்கும் சமாசத்தை உண்டாக்க அமெரிக்கா முனைந்தது. சோவியத் போலிஷ் தகராறு மேலும் முற்றும் முன்னதாக, அமெரிக்காவும், பிரிட்டனும், சோவியத் அரசாங்கமும் தம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக் கூடும். ஆனால், ஒரு உண்மையை மட்டும் எல்லாக் கட்சியினரும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். ரஷ்யாவோ, போலந்தோ, தம் மகத்தான பொது நன்மையைவிட, இந்த அற்ப வேற்றுமைகளைப் பெரிதாகக் கருதக் கூடாது. அப்படிக் கருதுவது புத்திசாலித் தனமுமாகாது. அந்த மகத்தான பொது நன்மை என்ன வென்றால், பரம்பரையாகக் கிழக்கே நாடு பிடிக்க வேண்டு மென்னும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஜெர்மானியர்கள் முன்னேற வொட்டாதபடி அவர்களைத் தடுப்பது தான். இந்த எல்லைப்புரப் பிரச்சினை தீருவதற்கு ஏதேனும் ஒரு வழி ஏற்படுமென்று நாம் எதிர் பார்க்கலாம்.

சேமித்து வைப்பதன் தீமைகள்

[சென்னை இந்து ரிலிஜஸ் எண்டோமெண்ட்ஸ் போர்ட் தலைமை கமிஷனராகிய திரு. ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திர செட்டியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., சென்ற 1944-ம் வருஷம் ஜனவரி மீ 12உ மாலை சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து செய்த ஒலிபரப்புப் பேச்சு.]

சிங்கத்தின் உதாரகுணம்

சிங்கம் பலமுள்ள ஜந்து. புலியைக் காட்டிலும் பலமுள்ளதென்பர். ஆனால், கம்பீரமானது அது உதார குணமுள்ளது. புலியோ குரூரமானது, சுயநலக் குணம் பொருந்தியது. சிங்கம் பசித்த போது தான் இரை தேடும். தன் பசிக்குப் போதுமான இரைதான் உட்கொள்ளும். அளவுக்கு மிஞ்சி மிருக வதை புரியாது. மற்ற ஜந்துக்கள் இரை கொள்ளட்டும் என்று எண்ணி தாராளமான நோக்கத்துடன் உறங்கிப் போகும். புலியோ பசித்தாலும் சரி பசிக்காவிட்டாலும் சரி எந்த மிருகம் எதிரில் வந்தாலும் கொன்று குவித்து விடும். இரை வீணாகப் போனாலென்ன, மற்ற ஜந்துக்களுக்கு இரை இல்லாமல் போனாலென்ன. அதைப்பற்றிக் கவலை கொள்ளாது. இவ்விரண்டு மிருகங்களைப் போல சில குடித்தனக்காரர்களும் வியாபாரிகளும் இருக்கிறார்கள். சிலர் தங்கள் குடும்பத்திற்கு வேண்டிய பொருள்களை வைத்துக்கொண்டு மிச்சமானவைகளை பொது மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார்கள். அவர்கள் சிங்கத்தை போல உதார சீலர்களாகலாம். வேறு சிலரோ எல்லாப் பொருள்களையும் தம்மிடமே மறைத்து வைத்துக்கொண்டு பசியோடிருக்கும் ஏழைகளுக்குச் சிறிதும் கொடாமல் துரோகம் செய்வார்கள். இவர்கள் புலிப் போல் துர்ப்புத்தி படைத்தவர்கள். யுத்த காலத்தில் சிங்கத்தின் கம்பீர குணம் வேண்டுமே ஒழிய புலியினுடைய குரூர குணம் கூடவே கூடாது.

பொதுஜன விரோதி

"எரிகிற வீட்டிலே பிடுங்கினது லாபம்" என்பது பழமொழி. யுத்தம் ஏற்பட்டவுடனே சில சுயநலப் புலிகள் கூடியமட்டில் லாபம் பெற்று சீமான்கள் ஆக வேண்டும், என்று முயற்சிப்பார்கள். அவ்வாறு லாபம் பெறுவது நியாய விரோதம் ஆகும். அதனைத் தடுப்பது அரசியலாரின் கடமை. மனிதனுக்கு அவசியமான பொருள்களாகிய உணவுப் பொருள்கள் ஆடை, உடைகள், தட்டு முட்டுச் சாமான்கள் நாணயங்கள் இவைகளை வெளிக் காட்டாமல் மறைத்து வைத்துக் கொண்டு சில வியாபாரிகள் அவைகள் இல்லாமல் தவிப்பவர்களுக்கு ஒன்றுக்குப் பத்தாக இரகசியமாக விற்பனை செய்வார்கள். உலகத்தில் அதைப் போல பெரிய லாபம் எதுவும் இல்லை. இப்படிப்பட்ட மனிதர்கள் பகற் கொள்ளைக்காரர்கள் அல்லவா! அரசியலார் எத்தனைக் கட்டுப்பாடு செய்த போதிலும் இரகசியமாக black market என்றதன் மூலம் திருட்டுத் தொழில் செய்பவர்கள் நாட்டுக்குத் துரோகிகள் அன்றோ? அரிசியோ, உப்போ, துணியோ, சில்லறைக் காசோ, காகிதமோ, இரப்பரோ எதுவானாலும் சரி, இரகசியமாக அதிக விலைக்கு விற்பது பெருத்த மோசடி ஆகும். அதனாலே ஜன சமூகத்திற்கும் தன்னைப் படைத்த கடவுளுக்கும் துரோகம் செய்தவர்கள் ஆவார்கள்.

ஒரு தகப்பனுக்கு ஐந்து மக்கள் இருந்தால் ஐவரும் சரியான உணவு, உடை முதலிய சௌகரியங்கள் பெற வேண்டும் என்பதே தகப்பனுடைய நோக்கமாகும். பெரியவன் பெரிய பங்கை எடுத்துக்கொண்டு சின்னவனுக்கு ஒரு சிறு பங்கு கொடுத்தால் தகப்பன் ஒப்புக் கொள்ளுவானா? உலகில் எல்லா மக்களுக்கும் கடவுள் தகப்பனார். அவர் முன்னிலையில் கை வலுத்தவன் அவசியமான ஜீவனப் பொருள்களையெல்லாம் சேகரித்து வைத்துக் கொண்டு இளைத்தவனைச் சாகும்படி விட்டு விட்டால் கடவுள் பொறுப்பாரா? முக்கியமாக உணவுப் பொருள்களை எவன் ஒருவன் சேகரித்து மறைத்து வைக்கிறானோ அவன் பெரிய பாவத்திற்கு உள் ஆகிறான். அப்படிப்பட்ட கொடிய பாவத்திற்கு விமோசனமோ கழுவாயோ இல்லவே இல்லை.

பேராசைக் குரங்கு

மேலும், சட்டத்திற்கு விரோதமாக பொருள்களை மறைத்து வைப்பவன் பெரிய பேராசைக்காரன், பேராசைக்காரர்கள் எல்லாம் முடிவில் மோசம் போவது நாம் கண்ட காட்சி. அதிக ஆசை அதிக நஷ்டம் அல்லவா? சிறிய கழுத்து கொண்ட ஒரு குடத்தில் பக்ஷணம் இருந்தது. அதற்குள் ஒரு குரங்கு கைவிட்டது. பக்ஷணம் முழுதும் கையில் அமுக்கிக் கொண்டு கையை வெளியே யெடுக்க முயன்றது. கையோ வெளியில் எடுக்க முடியவில்லை. திண்டாடிற்று. குடம் தான் கையோடு வந்தது. அது போல பேராசைக்காரர்கள் பொருள்களை மறைத்து வைத்துக் கொண்டு தாமும் சாப்பிடாமல் பிறருக்கும் கொடுக்காமல் குற்றத்தையும் பாவத்தையும் கைக் கொள்ளுகிறார்கள்.

அவர்கள் திருட்டுத் தனமாக மறைத்து வைத்த பொருளை வெளியில் காட்ட முடியவில்லை. அழுகக் கூடிய பொருள்கள் அடைத்து வைப்பதினால் அவை அழுகிப் போகின்றன. முடிவில் அப்பொருள் யாருக்கும் பயன் இல்லாமல் போய் விடுகிறது. பேராசை வீண் ஆசையாக முடிகிறதல்லவா?

ஒருவன் பணத்தினுடைய அருமை தெரியாமல் புதைத்து வைக்கிறான், அது அவனுக்கும் பயனில்லை பிறருக்கும் பயனில்லை. அதை ஒரு பூதம் வந்து காத்துக் கொள்ளுகிறதாம். நாளாவட்டத்தில் அது அப்பணத்தை எவரும் தொடவிடுகிறதில்லையாம். இவ்வித கதைகள் நமது நாட்டுப் புறங்களில் பெருவாரியாக உலாவுவது உண்டு. அது போல உணவுப் பொருள்களை மறைத்து வைக்கும் பேராசைக்காரர்கள் அவைகளின் பயனை அடைவது இல்லை. உணவுப் பொருள்களை மூடி வைத்தாலோ புழுக்கள் எலிகள் நாசம் செய்கின்றன. குற்றம் வெளியானால் சிறைவாசம் கண்டிப்பு. தப்பித் தவறி விட்டால் திருடர் பயம். திருட்டு ஏற்பட்டால் வெளியே சொல்லவும் வெட்கம். ஆகவே இவனுடைய புதையல்களுக்கு எத்தனை விதப் பூதங்கள் ஏற்படுகின்றன பாருங்கள்!

பலருக்கும் பயன்பட வேண்டும்

பொருளாதார நூலின்படி உலகத்தில் விளையும் பொருள்கள் மக்களின் வாழ்விற்குச் சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். அவை சில பேருக்கே உரியன அல்ல. பொருள்கள் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கக் கூடாது, அவை எப்போதும் செலாவணி ஆய்க் கொண்டுதான் இருக்க வேண்டும். காசு, துட்டு, பணம் எவ்வாறு செலாவணியாகித் திரிந்து கொண்டிருக்கிறதோ, அது போலவே, மனிதனுக்கு அவசியமான பொருள்கள் எல்லாம் செலாவணியாகிக் கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு செலாவணி ஆகாமல் தடுப்பது, ஒரு பொருளாதாரக் குற்றம் ஆகும். நாகரிகம் படைத்த நாடுகளில் அதனைச் சட்ட விரோதமாகப் பாவிப்பார்கள். ஆகவே உணவு முதலிய அவசியப் பொருள்களை ஒரே இடத்தில் எந்த கருத்தைக் கொண்டு மூடி வைத்தாலும் அது பெருங் குற்றமே யாகும். அக் குற்றத்தை அறிவாளிகள் செய்யமாட்டார்கள்.

லெப்டினெண்ட் கர்னல் திகம்பர் சிங் ப்ரார்
பட்டாலியனுக்குத் தலைமை வகித்து நடத்தும் முதல்
இந்தியா. இத்தாலியில் போராடும் மராட்டியப்
படைக்குத் தலைமை வகிக்கிறார்.

மனிதன் சுதந்திர உரிமை உள்ளவன் அல்லவா? அவன் பொருள் சம்பாதிப்பதைத் தடுக்க அரசியலார்க்கு அதிகாரம் உண்டா? என்று சிலர் கேட்கலாம். அவ்விதக் கேள்வி அறியாமையையும் அனுகரிகத்தையும் காட்டுகிறது. அது சிங்கத்தினுடைய குணமல்ல; புலியினுடைய குணமேயாகும். அடுத்த வீட்டுக்காரன் பசியோடிருக்கத்தான் அரிசியை மூடி வைத்திருத்தல் பாவம் அல்லவா? "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" "வேளாளன் என்பான் விருந்துண்டு வாழ்வான்" "சுற்றந்தழுவி நிற்றலே சிறந்த ஒழுக்கம்" என்று நம் பண்டைப் பெரியார்கள் கூறியுள்ளார்கள் அல்லவா? "அறஞ்செய விரும்பு," "ஐய மிட்டுண்" என்று பன்னிப் பன்னி ஔவைப் பிராட்டியார் கூறியுள்ள நீதிப்படி ஒழுகும் நம் நாட்டார் உரிமை, என்ற சொல்லின் அறை குறைப்பொருளைக் கொண்டு வாதாடுவது நம் அறிவுக்கு அழகாகுமா?

தற்போதிய போர் ஏற்பட்ட பிறகு, பலவித விபரீத காட்சிகளை நாம் ஒவ்வொருவரும் நேரில் கண்டு பரிதவித்திருக்கிறோம். ஒரே ஊரில் ஒரு சிங்கார மாளிகையில் ஒரு தனவந்தன் விலை உயர்ந்த உடைகளை அணிந்து கொண்டு ஆடல் பாடல்களில் காலம் கழித்துக கொண்டு அமிர்தபானம் செய்து கொண்டு வாழ்வான். அடுத்த குடிசையில் உண்ண உணவும், குடிக்க கூழும், உடுக்கக் கந்தையும் இன்றி, ஒரு கூலியாள் தவிப்பான். பொருள்களின் விலை ஒரே கணத்தில் ஏறிப் போகவே தனவந்தனுக்கு அது கொசுக்கடி போல் இருந்தது. ஆனால் கூலிக்காரனுக்கோ யானை இடி போல் ஆயிற்று. தனவந்தனிடம் 10,000 கலம் நெல் சேரியில் இருக்கும்; கூலிக்காரனுக்கு அதனால் என்ன பலன். கலத்தின் விலை 2 ரூபாய் ஆக இருந்தது ரூ. 56 ஆகி விடுமாயின் ஏழைக் கூலிக்காரன் என்ன செய்வான்? துணி கஜம் 8 அணாவிற்கு விற்றது 2 ரூ. ஆனால் எவ்வாறு துணி கட்டுவான்? இவ்விதம் கொடுமை நாடெங்கும் பரவியது. அரசியலார் இதனைக் கண்டு சரியான பரிகாரம் தேடினார்கள். அரிசி, துணி முதலியவைகளின் விலையை நிர்ணயித்து எவரும் அளவிற்கு மிஞ்சி சேகரம் செய்யக்கூடாதென்று கட்டளை இட்டார்கள். மீறினவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். குற்றங்களைக் கண்டு பிடிக்க உளவாளிகளும் ஏற்பட்டார்கள். அப்போது தான் துன்பம் அறிந்திரா தனவந்தன் துன்பத்தின் ருசி அறிந்தான். சென்னை முதலிய நகரங்களில் வசிக்கும் சீமான்களும் ஏழைகள் உண்ணும் அரிசியைச் சில நாள் உண்ண வேண்டி வந்தது. அப்போது அவர்கள் முகக் கோணலைப் பார்க்க வேண்டும். இந்த ஒரு அனுபவமே போதும். தனவந்தனையும் ஏழையையும் சமம் ஆக்கிவிட்டது எனலாம். இதை அறிந்தாகிலும் மக்கள் நீதியை கையாளுவார்களாக!

சாதாரண காலங்களில் உணவுப் பொருள் நெருக்கடி தோன்றுவதில்லை. போர் முதிர்ந்து, பெருந் துன்பம் விளைவிக்கிற காலத்தில் தான் அதன் நெருக்கடி அதிகம் ஆகத் தோணும். அக்காலத்திலும் மக்கள் துயரம் அடையாமல் இன்ப வாழ்வு பெறவேண்டுமானால் அரசியலார் மக்களுக்கு அவசியமான விதிகளை ஏற்படுத்துதல் வேண்டும். அவ்விதிகள் முதலில் கொடுமையாகத் தோன்றினாலும் உண்மையில் கொடுமையானவையல்ல. நன்மையே பயப்பன ஆகும். "தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்" என்ற பெரியார் வாக்கின்படி, உணவுப் பொருள்களைப்பற்றிய விதிகளே நம் மக்களுக்கு நற்பயன் தருவனவாம். இவ்விதிகளை அனுசரிப்பதில் அரசியலாரோடு நாம் ஒத்துழைக்க வேண்டும். கொள்ளைக்காரப் புலிகளை வெருட்டித் துரத்த வேண்டும். உதார சீலச் சிங்கங்களையே போற்ற வேண்டும். அவ்வாறு செய்தால், மக்கள் துயரத்திலிருந்து காப்பாற்றப்படுவார்கள். போரும் வெற்றி அடையும். போருக்குப் பின்னும் நாடு நலிவுறாமல் மேன்மை யடையும். அதனையே கோருவோமாக!

ஹிட்லர் சூரத்தனம்



சோவியத் புலிக்கு பால்கன் நாடுகளைப் பலி கொடுக்கிறார் ஹிட்லர்.

யுத்த காலத்தில் வரிப் பெருக்கம்

ஏழைகள் பாதிக்கப்பட்ட விலை

யுத்த காலத்தில் இந்தியா அதிகப்படியாக எவ்வளவு வரி செலுத்தியிருக்கிறது?

யுத்தத்திற்கு முன்பு 1938-39-ம் வருஷம் வசூலிக்கப்பட்ட வரி விகிதப்படி, யுத்த காலத்தில் அதாவது 1939-40 முதல் 1943-44-ம் வருஷங்களில் (மொத்தம் 5 வருஷங்களில்) 423 கோடி ரூபாய் தான் வசூலாகியிருக்க வேண்டும். ஆனால் உண்மையிலேயே வசூலானது 727 கோடி. ஆகவே 304 கோடி ரூபாய் அதிகமாக வசூலாகியிருக்கிறது. இந்த அதிகத் தொகை வசூலானதற்குக் காரணங்களாவன:—(1) வரி வரவுகள் சாதாரணமாக உயர்ந்து கொண்டு போவது; (2) அதிகப்படி வரி விதிப்புக்கள்; (3) ரயில்வேக்களிடமிருந்தும், தபால் தந்தி யிலாக்காக்களிடமிருந்தும் அதிக வரவு, இவை யுத்தத்தினால் ஏற்பட்ட அதிக வரவுகள். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அசல் ரெவின்யூ வரவுகளில் 195 கோடியும், ரயில்வே தபால் தந்தி இலாக்காக்களின் வசூல் விகிதத் தொகையில் 95 கோடியும், மற்ற துறைகளிலிருந்து 45 கோடியும் ஆக மொத்தம் 334 கோடி அதிக வரவாகிறது. ஆனால். வருமான வரித் தொகையிலிருந்து மாகாணங்களுக்கு இதினின்று 30 கோடி ரூபாய் கொடுக்கப்படுவதால், மீதியுள்ள அதிகப்படி வரவுத் தொகை 304 கோடி மட்டுந்தான்.

அசல் ரெவின்யூ வரவுத் தொகையில் 195 கோடி அதிக வரவுக்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம். (1) சாதாரணமாக வரிவசூல் வருஷா வருஷம் அதிகப்பட்டுக் கொண்டிருப்பது. (2) அதிகப்படி வரி விதிப்பு 'அவரவருக்குள்ள பலவகை வருவாய்களையும் சேர்த்துக் கணக்கிட்டு வருமான வரி விதிக்கும்' முறையைக் கையாண்டதன் பயனாக, வருமான வரி வசூல் படிப்படியாக உயர்ந்து கொண்டே போகிறது. யுத்தங் காரணமாக வியாபாரம் அதிகப்பட்டது. ஆகவே வருமான வரி செலுத்துகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகப்பட்டது. அது போலவே, கலால் இலாக்கா வருவாயும் அதிகப்பட்டது. இதற்குக் காரணம், உற்பத்திகள் சம்பந்தமான கைத் தொழில்களும் அதிகப்பட்டது தான். இவற்றையும் பிற காரணங்களையும் கொண்டு நாம் ஆலோசித்துப் பார்ப்போமானால், முற் கூறிய தொகையில் ஒரு பாதி, அதிக வரி விதிக்கப்பட்டதனால் கிடைத்ததென்றும், மிகுந்துள்ள தொகை, சாதாரணமாக உயரக் கூடிய வரித் தொகை வசூல் அதிகப்படுவதனால் ஏற்பட்டதென்றும், தெளிவாகத் துலங்கும்.

யார் செலுத்தக் கூடியவர்களோ, அவர்களுக்கு மட்டுந்தான் யுத்த சம்பந்தமான வரி விதிக்கப் பட்டிருக்கிறது. இதனால், ஏழைகள் மிக மிகக் கொஞ்சமாகத் தான் பாதிக்கப்படுவார்கள். 1940-ம் வருஷம் தன் வரவு செலவுத் திட்டத்தை இந்தியா சட்ட சபை முன் சமர்ப்பித்த கனம் நிதி யங்கத்தினர் அவர்கள், ஒரு விஷயத்தை வெகு தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதாவது, யுத்தங் காரணமாக யார் யார் ஏராளமான லாபந் திரட்டினார்களோ, அவர்கள் இந்த இலாபத்திலிருந்து மிகப் பெரும் பகுதியை அரசாங்கத்திற்கு யுத்தச் செலவுகளை முன்னிட்டுச் செலுத்த வேண்டுமென்று கூறினர். இந்தக் கொள்கை காரணமாக, அதிக லாப வரி, படிப் படியாக $66\frac{2}{3}$ சத விகிதம் உயர்ந்து விட்டது. அது போலவே 'சர் சார்ஜ்' தொகையும் 'சூபர் டாக்ஸ்' தொகையும் படிப்படியாக உயர்ந்து, இப்போது வருமான வரியையும் இவற்றோடு சேர்த்துப் பார்த்தால் 87·9 சத விகிதம் கணக்காகிறது. இவை மட்டுமன்றி, சென்னை நகர சபை வரியும் அதிகரித்து விட்டது.

ஒரு வியாபாரி தனக்கு யுத்த காலத்தில் கிடைக்கும் இலாபத்தில் மூன்றில் இரண்டு பங்குத் தொகையை அதிக லாப வரியாகச் செலுத்துகிறார். வருமான வரியாகவும் 'சர் டாக்ஸாகவும், $13\frac{1}{3}$ சத விகிதம் செலுத்துகிறார். இந்தத் தொகையை டிபாசிட்டாக அவர் கட்டாயம் கட்டித்தானாக வேண்டும். யுத்தம் முடிந்த பிறகு, இது அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். ஆகவே, இப்போது அந்த யுத்த லாபத் தொகையில் அவருக்கு மிஞ்சுவது $6\frac{1}{3}$ சத விகிதம் மட்டுந் தான். மீதி $93\frac{2}{3}$ சத விகிதம் அரசாங்கத்திற்கு வரியாகவோ, டிப்பாசிட்டாகவோ போய்ச் சேருகிறது.

யுத்த காலத்தை முன்னிட்டு நேர் முகமாக வரி விதிக்கப்பட்டிருப்பது உயர்ந்த வருமான வரியைக் கொண்டு மட்டுந் தான். 1943-44-ம் வருஷத்திய திட்டப்படி, இதன் மூலந் தான், பெரும் பகுதி யுத்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக 102 கோடி ரூபாய் தான் இதன் மூலம் வசூலாகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது; ஆனால், அசல் ரெவின்யூ வரவுகளில் 169 கோடி ரூபாய் வசூலாகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. மற்றப்படி மறை முகமாகத் தான் வரி வசூலிக்கப்படுகிறது; உதாரணமாக, கலால் வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது; புதிய கலால் வரியும் விதிக்கப்பட்டிருக்கிறது. தபால், தந்தி, டெலிபோன் விகிதங்களும் உயர்ந்திருக்கின்றன. கடற் சுங்க வரிகளில் பொதுவாக 20 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. இந்த வரிகளுங் கூட, ஏழை மக்களைப் பாதிக்காத முறையில் தான் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வரிச் சுமையைத் தாங்க மாட்டாதவர்களுக்கு இது விதிக்கப்படக் கூடாது என்பது தான் இது சம்பந்தமான கொள்கை.

தபால் விகிதங்கள் படிப்படியாக உயர்த்தப்பட்டதனால், அதிக வருவாய் அதன் மூலம் ஏற்பட்டது. யுத்தங் காரணமாகக் கடுமையான கடற் சுங்க வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

வருமான வரிக்கு அடுத்தபடியாக கலால் வரியில், இந்த யுத்த காலத்தில் பெருந் தொகை வசூலாகிறது. யுத்தங் காரணமாகக் கைத் தொழில் உற்பத்தி அதிகப்படுவதனால், சாதாரணமாக வரி உயர்வு ஏற்படக் கூடும். இது மட்டுமன்றி புதிய வரிகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கரைக்கு விதிக்கப்பட்டிருந்த கலால் வரியில் ஒரு ரூபாய் விகிதம் உயர்த்தப்பட்டது. தீப்பெட்டிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி இரண்டு பங்காக உயர்ந்துவிட்டது. பெட்ரோல் வரி ஒரு காலனுக்கு 2 அணா விகிதம் உயர்ந்து விட்டது. 'டையர்'களுக்கும் 'ட்யூப்'களுக்கும் 10 சத விகிதம் புதிய கலால் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. புகையிலைக்கும் வனஸ்பதிக்கும் 1943-44-ம் வருஷத்தில், கலால் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

பொறுக்கு மணிகள்

கீதோபதேசம் கேட்டு, குருக்ஷேத்ர யுத்த களத்திலே அர்ஜுனன், பல அரிய உண்மைகளை அறிந்து, பகவானின் பெருமையையும் உணர்ந்து, தனது கடமையைச் செய்து அழியாப் புகழ் பெற்றானல்லவா? அவனுக்கு பெரும் புகழைப் பெற்றளித்த அதே கீதை, ராமாநந்த ஸிங் என்றொரு இந்திய ஹவில்தாரின் உயிரைக் காப்பாற்றி யிருக்கிறது.

பர்மாவைக் கைப்பற்ற அரக்கான் போர் முனையில் நின்று போராடும் படையுடன் இந்த ஹவில்தாரும் கலந்து, தமது கடமையைத் திறம்படச் செய்து வருகிறார். போராடுவது எப்படி தனது கடமையோ, அதே போல, அனுதினமும் சிறிது நேரமாவது கீதையைப் பாராயணம் செய்ய வேண்டுமென்பதையும் தமது கடமையாகக் கொண்டவராம் அவர். எங்கு சென்றாலும் தனது இதயத் தருகிலேயே ஒரு கீதையை வைத்திருப்பாராம் அவர். நல்ல வேளையாக பகவான் அர்ஜுனனுக்கு நிறைய உபதேசம் செய்து வைத்திருந்தார். இல்லாவிட்டால், இந்த ஹவில்தாரின் பாக்கெட்டிலிருந்த பகவத் கீதைப் புத்தகம் அப்பளாத்தின் கனம் தானே இருந்திருக்கும்? அவ்வாறு இருந்திருந்தால், அது எப்படி ஒரு குண்டின் வேகத்தைத் தடுத்திருக்க முடியும்? இந்தக் குறிப்பும் நம்மால் எங்கே எழுதி யிருக்க முடியும்? "பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவும் ஒன்று" என்று தான் போயிருக்கும் இந்த ஹவில்தாரின் உயிரும்.

இந்த ஹவில்தார், தமது ஜமேதார் காயம்பட்டு விழுந்ததும், தாமே அவரது ஸ்தானத்தை வகித்து, தமது படைகளை குன்றின் மேல் நடத்திச் சென்றிருக்கிறார். ஜப்பானியர் அப்பொழுது கடுமையாக யந்திர பீரங்கிப் பிரயோகம் செய்தார்களாம். அதை ராமாநந்த ஸிங் லக்ஷ்யமே செய்யவில்லை. அப்படியே முன்னே சென்று கொண்டிருந்தாராம். அவருடைய முழங்காலில் காயம் பட்டு விட்டதாம். சிறிது நேரம் கழித்து, அவரது முகத்திலே குண்டுச் சிறுய்கள் பட்டுவிட்டனவாம். சிறிது நேரங் கழித்து, அவர் அக் குன்றின் உச்சியிலிருந்து ஒரு ஜப்பானியனால் உருட்டப் பட்டாராம். அதைப் பார்த்துவிட்டாராம் அந்தத் படையின் பெரிய தலைவர். தன் தொடையில் பாய்ந்த குண்டையும் லக்ஷ்யம் செய்யாது, அவர் ராமாநந்த ஸிங்கைக் காப்பாற்றினாராம். அவருடைய உடம்பில் காற்றுப் படட்டு மென்று, தனி இடத்திற்குப் போனதும் அவரது சட்டையைக் கழற்றிப் பார்க்கும் பொழுது, ராமாநந்த ஸிங்கின் உள் பையிலே, இடது மார்பருகே ஒரு கீதை இருந்ததாம். அதிலே கடைசிப் பக்கத்திற்கு நாலு பக்கங்கள் முன் வரை, ஒரு குண்டு பாய்ந்திருப்பது தெரிந்ததாம். சைனிய மெங்கும் இதே பேச்சாம்.

* * * * *

ஜப்பானியர் கப்ஸா மாஸ்டர்கள்

ஜப்பானியர் பெரிய கப்ஸா மாஸ்டர்கள் என்பது அவ்வப்பொழுது வெளியாகி விடுகிறது. கப்ஸா விடுவதற்கு இவர்கள் தங்கள் முத்தண்ணாக்களான ஜெர்மானியரிடம் இன்னும் ரொம்பப் பாடம் படிக்கவேண்டும். ஹிட்லரின் சுய சரிதம் ஜப்பானில் அதிகமாக விற்கப் படவில்லை போலிருக்கிறது. அது நிறையக் கிடைத்திருந்தால், ஜப்பானியரும் கப்ஸா விடுவதில் உள்ள அந்தரங்கங்களை யெல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்திருப்பார்களே! ஜப்பானியரது பலூன்கள் எப்படி கடையிலிருந்து வாங்கப்பட்டு, இரண்டு தடவை ஊதப்படுவதற்குள் 'டபார்' ஆகிவிடுகிறதோ, அதே போல, ஜப்பானியரில் சிலர் ரேடியோவில் சொல்லும் செய்திகளும், அடித்துக் கொள்ளும் ஜம்பமும் சில தினங்களிலேயே வெளுத்துப் போய் விடுகின்றன.

'பர்மா சுதந்திர நாடாகி விட்டது. அங்குள்ள கிழக்காசிய மக்கள் இப்போது ஒன்று பட்டு, தங்கள் வேலைகளை ஊக்கத்தோடு செய்து வருகிறார்கள். அவர்களின் ஒத்துழைப்பு நமக்குப் பூரணமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது' என்றார் ஒரு ஜப்பானிய கனவான். அவர் தன்னை, அகண்ட கிழக்காசிய விவகார மந்திரி என்று பட்டம் சூட்டிக் கொண்டிருக்கிறார். ஆசியா எப்பொழுது அகண்டது? எங்கே அகண்டது? என்பதைப் பற்றி அவர் வியாக்யானம் செய்ததாகத் தெரியவில்லை. ஒரு வேளை அவரது கண்கள் ரொம்ப அகலமாகத் திறந்திருக்கலாமோ என்று பார்த்தால், இயற்கையாகவே அவருக்கு உள்ளிப் பூண்டுத் தோலைப் போன்ற கண்கள் தானிருக்கின்றனவாம். ஒரு வேளை நேச தேசத்தாரின் வெடி குண்டுகளால், ஜப்பானியர் இருக்குமிடங்கள் வெடித்துப் பிளந்து கொண்டிருக்கக் கூடும். பிளந்த ஆசியா என்பதற்குப் பதிலாக, அகண்ட ஆசியா என்று சொல்லுகிறார்கள் போலிருக்கிறது.

நிற்க, பர்மாவில் ஜப்பானியர் பர்மிய மக்களுக்கு அளித்திருப்ப தாகக் கூறும் சுதந்திரத்தின் அழகைப் பாருங்கள். அரக்கான் மலைப் பிரதேசத்திலே ஒரு மாதிரியான மலை நாட்டினர் வசிக்கிறார்கள். அவர்களில் ஒரு குடும்பத்தினர் மீது நேச தேசத்தாரின் வெடி குண்டுகள் தெரியாது பாய்ந்து விட்டனவாம். அந்தக் குடும்பத்தினர் இருந்தது, ஜப்பானியர் வச முள்ள பர்மா பிரதேசம். ஆனாலும், அவர்கள் மேற் கொண்டு வரக் கூடிய ஆபத்துக்களையும் லக்ஷ்யம் செய்யாது, நேச தேசப் படைகளிருக்குமிடத்தையே நாடி வந்து, காயங்களுக்கு மருந்து போட்டுக் கொண்டு போனார்களாம். இதைக் கேள்விப்பட்டுவிட்டு, ஜப்பானியர் என்ன சொன்னார்களோ தெரியவில்லை.

இது யுத்த காலம். வைத்தியர்களுக்கு மருந்துச் சரக்குகள் ஒன்றும் அதிகம் கிடையாத காலம். இந்தச் சமயத்திலே எவ்வளவுக் கெவ்வளவு மருந்துகளைச் சேர்த்து வைத்துக் கொள்ளுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது அல்லவா? இந்த உத்தேசத்தோடு தான, நமது அகண்ட ஆசியாவாசிகளான அரக்கான் மலை நாட்டினரில் சிலர், நேச தேச குண்டுகளுக்குக் குறியாகி, காயமடைந்தபோது, அவர்களை நேச தேச ராணுவ ஆஸ்பத்திரிக்கே போகச்சொன்னோம். அவர்களும் நமது ஆக்ஞைப்படியே சென்று, மருந்து போட்டுக்கொண்டு வந்து விட்டார்கள். இவ்வாறு நமக்குதவும் மலை நாட்டினருக்கு நமது வந்தனங்கள் என்று அதற்கு மறு நாள் ஜப்பானிய ரேடியோவில் சொல்லப்பட்டிருந்தாலும், நாம் ஆச்சரியப் படமாட்டோம்.

இது மட்டுமா? பர்மிய கிராமங்களிலிருந்து எழுநூறு பேர்கள் ஒரே நாளில் பிரிட்டிஷார் பக்கம் வந்து விட்டார்களாம். தங்களது வீடு வாசல்களை யெல்லாம் ஜப்பானியரது காட்டு மிராண்டித் தன லீலைகளுக்கு அர்ப்பணம் செய்து வந்தவர்கள் அவர்கள். ஜப்பானியரின் குரூரச் செயல்கள் பர்மிய மக்களின் மனங்களைத் திடுக்கிடச் செய்து, ஓடவும் விடுகின்றன. ஜப்பானியரின் அன்பு தான் என்னே! ஜப்பானியருக்கு பர்மியர் அளிக்கும் ஒத்துழைப்பின் பெருமை தான் என்னே! வெளியிலே சொன்னால் வெட்கக் கேடு! செய்கிறது கசாப்புக்கடை வேலை. சொல்கிறது அரி வேலை. அரி என்றால் விஷ்ணு என்று அர்த்தமாகட்டும் என்பது அவரது ஆசை. ஆனால் உண்மை என்னவோ அறுக்கும் வேலை அல்லவா?

பிரமிக்க வைக்கும் அமெரிக்கர்கள்

அமெரிக்கர்கள் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றும் உலகோரைப் பிரமிக்க வைக்கின்றன. 'யுத்தத்தை வெற்றிகரமாக முடிக்க, அமெரிக்கா இன்னும் ஊக்கத்தோடு, தனது முழு சக்தியையும் உபயோகித்தாக வேண்டும். வருகிற வருடப் போருக்குச் செலவிட பதினாயிரம் கோடி டாலர்கள் அதாவது சுமார் முப்பத்தையாயிரம் கோடி ரூபாய்கள் தேவை என்று அவர் தம் நாட்டுச் சட்டசபைக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறாராம். ஒரு கோடி என்றாலே, 'ஏ அப்பா!' என்கிறோம். சென்ற நான்கு வருடங்களில் இந்தியா கூட ஆயிரத்துச் சொச்சம் கோடி செலவிட்டிருக்கிறது. அதைப் பத்திரிகைகளில் வாசிக்கும் பொழுதும் 'ஐயோ!' என்று ஆச்சரியப்படுகிறோம். ஆனால் முப்பத்தையாயிரம் கோடி என்றால், பேசவே வாய் வருவதில்லை. இவ்வளவு பணத்தையும் அமெரிக்க மக்கள் தானே கொடுத்தாக வேண்டும்! அந் நாட்டில் உள்ள ஆலை முதலாளிகளுக்கும், மற்றும் பலருக்கும் கொள்ளை லாபம் கிடைத்துக் கொண்டிருக்கக்கூடும். ஆனாலும், யுத்தத்திற்காக இப்படிப்பட்ட அளவற்ற பணத்தை பொது ஜனங்கள் தானே திரட்டிக் கொடுக்க வேணும்? எந்நாளும் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இன்னும் கொஞ்சம் அவதிப்படுவது பெரிதில்லை. ஆனால், எந்நாளும் ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் படுத்து வழக்கமுள்ளவன்தான் ஒரு பட்டுப்பாயில் படுத்தால் கூட, 'ஐயோ! உடம்பெல்லாம் வலிக்கிறதே!' என்பான். அதேபோல, அமெரிக்கர்கள் சுக புருஷர்கள். அவர்களைப்போல் சுகத்தை அனுபவிப்பவர்களை இவ்வுலகில் வேறெங்கும் காணவே முடியாது. அவர்களது மோட்டார்கள் சாதாரணமாக ஓடுவதே மணிக்கு எழுபது எண்பது மைல் வேகத்தில். உடை, நாகரிகம், வீடு வாசல், வியாபார முறை எல்லாவற்றிலும் ரொம்ப உயர்ந்திருப்பவர்கள். ஹவாய் எங்கே, ஹானலூலு எங்கே என்று சுகமனுபவிக்கக் கூட்டம் கூட்டமாக ஓடுகிறவர்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களது சகல சுகபோகங்களையும் விட்டுவிட்டு, ரூபாயிலேயே ஓரிரண்டு அணுக்களை வைத்துக்கொண்டு பாக்கியை தர்மம் செய்து விடுவதுபோல், தாராளமாகக் கொடுக்கிறார்கள் என்றால், அது ஆச்சரியமல்லவா?

ஏராளமாகப் பணமும் மற்ற வசதிகளு மிருப்பதால் தான், அமெரிக்கர்கள் இந்த உலக மகா யுத்தத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு, உலகின் பல் வேறு மூலை முடுக்குகளுக்கும் ஆட்களையும், ஆயுதங்களையும், கப்பல்களையும் அனுப்ப முடிகிறது.

ஒரு நாளையில் 5 கப்பல்கள் தயார்

ஜப்பான் போரிலிறங்கிய பிறகு, அமெரிக்கர் 2,400 கப்பல்களைக் கட்டியிருக்கிறார்களாம். தற்சமயம் ஒரு நாளைக்கு ஐந்து கப்பல்கள் 'ரெடி' யாகிக் கொண்டிருக்கின்றனவாம். 1944-ம் வருடம் முடிவதற்குள், ஐம்பது கோடி டன் எடையுள்ள கப்பல்கள் அமெரிக்கரிடம் இருக்குமென்று எதிர்ப்பார்க்கப் படுகிறதாம். ஐரோப்பாவிலே போர் தொடங்கு முன், உலகில் உள்ள எல்லாக் கப்பல்களின் மொத்த எடை சுமார் எழுபது கோடி டன்கள் தான். இப்பொழுது அமெரிக்காவிடம் மட்டும் ஐம்பது கோடி டன் என்றால், பிரமாதம் தானே!

அமெரிக்க விமானங்களில் "பறக்கும் கோட்டை" என்ற விமானம் மிகப் பெரிய விமானம். மகா சக்தி வாய்ந்தது. "பறக்கும் கோட்டைகள்" இப்பொழுது பட்டப் பகலிலேயே ஜெர்மனி மீதும், ஜெர்மனி ஆக்ரமித்த நாடுகள் மீதும் குண்டுகளை வீசச் செல்லுகின்றனவாம், இந்தப் பெயரைக் கேட்டாலே, தப்பித் தவறி ஒரு "பறக்கும் கோட்டை"யைப் பார்த்தாலே, ஜெர்மானியருக்கு இனி குலை நடுங்கு மென்பது நிச்சயம்.

போன வாரம் கூட ஒரு நாள், எழுநூறு "பறக்கும் கோட்டை"களும், லிபரேட்டர்களும், "பேரிடி" "மின்னல்" என்ற பெயருள்ள விமானங்களும், நெடுந்தூரம் பறந்து செல்லும் சண்டை விமானங்களும் பெர்லினை நாடிச் சென்று நொறுக்கித் தள்ளியிருக்கின்றன. ஜெர்மனியின் முக்கியமான விமான உற்பத்திசாலைகள் எல்லாம் தவிடு பொடி யாயின. விமானங்களின் உதவி யின்றி எதுவும் செய்ய முடியாதபடி உள்ள இந்நாளிலே, விமான உற்பத்தி சாலைகள் பாழாவ தென்றால், அதை விட அதிர்ச்சி தரும்படியான செய்தி ஏதாவது உண்டா? சுமார் அறுபது அமெரிக்க விமானங்களே இதற்காக காவு கொடுக்கப்பட்டனவாம். ஆனாலும், பலன் என்னவோ நல்ல பலனாகவே இருக்கிறது. இப்பொழுது பாழாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் எல்லாம் உற்பத்தி வேகத்தை அதிகப்படுத்த சமீபத்தில் தான் முயற்சி செய்தார்களாம். ஆகவே, அந்தத் தொழிற்சாலைகள் போனதில் ஜெர்மானியர் பாடு ரொம்ப மோசம் தான்! இந்த ஆலைகளை ரிப்பேர் செய்யப் பலமாதங்கள் பிடிக்குமாம். அந்த மாதங்களில் நேசதேச விமான பலம் பலமடங்கு பெருகு மல்லவா? அவ்வளவுக் கவ்வளவு நமக்கு நல்லது தானே?

ஹிட்லர் இப்பொழுது திருதிரு என்று முழித்துக் கொண்டிருக்கக் கூடும். வரவர சீமையி லிருந்து அதிகப்படியான விமானங்கள் வருவதைக் கண்டு பீதி கொண்டு, அவர், கைவச மிருந்த "ரிஸர்வ்" வேட்டை விமானங்களையும் ஏவி விட்டு விடுவதாகத் தெரிகிறது.

(10-ம் பக்கம் பார்க்க)

சென்னை சிப்பாய்கள் விழாக் கொண்டாட்டம்

அஸ்ஸாம் எல்லைபுரத்திலுள்ள சென்னை சிப்பாய்கள் பல வகுப்பினர் கள் இருக்கிறார்கள். என்றாலும் இன்ப துன்பங்களில் சிறந்த ஒற்றுமையுடன் விளங்குகிறார்கள். விருந்துகளில் தாமே சமைக்கிறார் கள். சென்ற மாதம் நடைபெற்ற கிருஸ்மஸ் விழாவின் போது, தம் சமையல் திறமையை வெகு சிறப்போடு வெளியிட்டார்கள். பாசறையி லுள்ள தோர் ரொட்டிக் கிடங்கில் ஆயிரக்கணக்கான பவுண்ட் ரொட்டியும் "ப்ளம் கேக்" கும், "பன்" னும், பிஸ்கோத்துகளும் செய்தார்கள். அன்று பகல் உணவு அருந்திய பிறகு, அனைவரும், பல சாதியினரும், மதத்தினரும் வேற்றுமை யின்று உட்கார்ந்து பல விஷயங்களைக் குறித் தும் அளவளாவிக் கொண்டிருந்தனர். அப்போது கிராமபோன் இசைத் தட்டுகள் இன்னிசை யொலித்துக் கொண்டிருந்தன. தஞ்சாவூரைச் சேர்ந்த **சிப்பாய் ராஜு** அருமையாகப் பாடி அனைவரையும் களிப்பித் தார். இந்தப் பாட்டுக்களில் பல, அவர் தாமே இயற்றியவை. அந்தப் படையிலுள்ளவர்கள் பலருக்கும் இந்தப் பாட்டுக்கள் நன்றாகத் தெரிந் திருக்கின்றன. அன்று நடை பெற்ற விருந்தில், அந்த எல்லைப்புற ஆட்டிறைச்சியைக் கொண்டு குருமா முதலிய சுவை மிகுந்த பண்டங் களைத் தயார் செய்து தாராளமாகச் சாப்பிட்டார்கள்.

ஒரு சிக்னல் படையினர் தாமே ஒரு பந்தல் அமைத்து அதன் வாயிலில் வளைவுக ளெல்லாம் கட்டி, தம் விழாவில் கலந்து கொள்ளும்படித் தம் படை உத்தியோகஸ்தர்களை யழைத்தார்கள். அங்கு நடைபெற்ற விருந் தும் வெகு தாராளமாகவே நடை பெற்றது. கடைசியில் திருவனந்த புரத்தைச் சேர்ந்த **லான்ஸ் நாயக் ஜேக்கப்ஸ்** நன்றி கூற அந்த விழா முடிவுற்றது.

இவ்வாறாக, படையின் பல பகுதியினரும் தம் விழாக்களைப் பாசறை யிலும் சிறப்பாகக் கொண்டாடிக் களிக்கிறார்கள்.

விமான பிரதம மார்ஷல் சர் ஆர்தர் டெட்டர்,
நேச தேச ஐரோப்பியத் தாக்கும் படையின் டிபுடி சுப்ரீம் கமாண்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(9-ம் பக்கம் தொடர்ச்சி.)

போனவாரம் பெர்லினைத் தாக்கச் சென்ற விமானங்களை இந்த வேட்டை விமானங்கள் சரியானபடி எதிர்த்தனவாம். சுமார் நூறு ஜெர்மன் விமானங்கள் சுடப்பட்டிருக்கும் என்கிறார்கள். இப்படியே போய்க் கொண் டிருந்தால், ஜெர்மனி முழுவதுமே கடைசியில் பொசுங்கியே போகும் என்பது நிச்சயம்.

ருஷ்யாவிலே திண்டாட்டம்

ஜெர்மானியர் மத்தளம்போல் இருபுறமும் இடிபடுகிறார்கள். மேற்கே, இங்கிலாந்தில் இரண்டாவது போர்முனை ஆரம்ப வேலைகள் எல்லாம் அதி துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஐஸன்ஹோவர் கூட, தமது பதவியை ஏற்றுக்கொண்டாகி விட்டது. ஆங்காங்கே நேச தேசத்தார் ஆழம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாள் தவறாது பிரிட்டிஷ், அமெ ரிக்க விமானிகள் 'ஜெர்மனியருக்கு ஏக நஷ்டத்தை விளைவித்து கொண் டிருக்கிறார்கள். ஜப்பானிலிருந்தெல்லாம் ஜெர்மனி வெகு ரகசியமாக சாமான்களை வரவழைத்துக் கொண்டிருக்கிறது போல் தெரிகிறது. சமீ பத்தில் கூட ஒரு கப்பல் ஸ்பெயின் அருகே மாட்டிக் கொண்டு, தன்னைத் தானே கவிழ்த்துக் கொண்டது. மேற்றிசையி லிருந்து நேசதேசத்தார் கள் எந்த நிமிஷத்திலும் தாக்குதலை ஆரம்பிக்கக் கூடும். நல்ல சந்தர்ப் பம் மட்டும் அவர்களுக்குக் கிடைக்க வேணும். நாமும் ஏதோ தோத்திரம் செய்யப் போனோம், போன சமயத்தில் நல்ல சகுனம் போல், மணியும் ஒலித்தது என்றால் சந்தோஷ மிருக்குமா, இருக்காதா ?

அதே போல், மேற்றிசையி லிருந்து நேசதேசப் படைகள் பாய்வதற்கும் கிழக்கே உள்ள ருஷ்யர்கள் குரல்வளையை பிடிப்பதற்கும் ஒற்றுமை ஏற் பட்டு விட்டால் ஜோராக இருக்கு மல்லவா ?

கிழக்கே இப்பொழுது நிலைமை எப்படி யிருக்கிறது தெரியுமா ? "ஒன்று பட்டு ஒத்துழைக்கிறது என்பது கிடக்கட்டு மய்யா ! ருஷ்யர்கள் மேலே விழுந்து முன்னேறுவ தென்ற பேச்சே கிடையாதய்யா !" என்று 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 2-ம் தேதி ஜெர்மன் சர்க்கார் கூறிற்று.

ஆனால் நடந்த தென்ன ? 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 31-ம் தேதி யன்று, ஸ்டாலின்கிராடிலே, ஒரு பெரிய ஜெர்மன் பீல்ட் மார்ஷல் ருஷ்யர்களிடம் சரணடைந்தார். எப்படியாவது தங்களது பலத்தை அதி கரித்துக் கொண்டு விட வேண்டுமென போன வருஷத்தில் ஜெர்மானியர் கோடைத் தாக்குதலை ஆரம்பித்தார்கள். கோடையிலே கொன்னு தள்ளு வார்கள் ஜெர்மானியர் என்றிருந்த பெயரெல்லாம் போன வருஷமும் பொய்யாகி விட்டது. ஜெர்மானியரின் கோடைத் தாக்குதல் வெறும் "புஸ்" வாணமாகி விட்டது. அவர்களுக்கு லபித்த தெல்லாம், 17 டாங்கிப் படைகள், 3 மோட்டார் பகுதிகள், 18 காலாட் படைகள் நஷ்ட மானது தான். ஒரு குறிப்பிட்ட இடத்திலே, கடுகளவு நன்மையும் இல்லாது இவ்வளவு நஷ்டத்தை ஜெர்மானியர் அடைந்தது, அவர்களுக்குப் போதாத காலந்தான். அதற் கப்புறமும் ஜெர்மானியர் என்னென்ன வெல்லாமோ கஜகர்ணங்கள் எல்லாம் போட்டுப் பார்த்து விட்டார்கள். ஒன்றும் பலிக்கவே யில்லை. செஞ்சேனை, நாஜிகளுக்கு மூச்சு வாங்கக் கூட ஓய்வு கொடுப்பதாக இல்லை. குளிர் காலப் போரை அதி மும்முரமாக ருஷ்யர்கள் நடத்தி வருகிறார்கள். நடுத் தெருவில் கிடக்கும் நாய்களென நாஜிகள், வெட்ட வெளியில், கொட்டும் பனியில், வெடவெடத்து, நடு நடுங்கி, குலை நடுக்கத்துடன் செய்வ தின்ன தென்று தெரியாது பின் வாங்கி ஓடுகிறார்கள். சொக்கப்பனை எரியும் பொழுது, அருகில் உள்ள மரங்களின் இலைகள் அந்த அனல்பட்டுத் தீய்ந்து போவது போலவும், சுற்றுமுற்றிலு முள்ள எறும்புகள் துடித்து விழுந்து சாவது போலவும் ஜெர்மானியர் மடிந்த வண்ணமாகவே இருக்கிறார்கள்.

டிஸம்பர் 24 முதல், ஜனவரி பதிமூன்றாந் தேதிக்குள் ஒரு லக்ஷம் நாஜிகள் உயிரிழந்திருக்கிறார்களாம்! ஐயோ கடவுளே !

திடீர் திடீரென்று வீர ருஷ்யர்கள் இடுக்கித் தாக்குதலை ஆரம்பித்து விடுகிறார்கள். பட்டதெல்லாம் போதும், படமுடியாதினி நஷ்டம் என்று நாஜிகள் தப்பிக்கும் வழி மீதே கண்ணாயிருக்கிறார்கள்.

ஆனால் நாஜிப் படைத் தலைவருக்குப் பல கவலைகள். கூடிய வரை ருஷ்யாவிலேயே போரை நிறுத்தி வைத்து நடத்த வேண்டு மென்பது அவரது அவா. ஆனால் ருஷ்யர்களோ மெயில் வேகத்தில் ஜெர்மன் எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிறுத்த வான் மான்ஸ்டீன் புது முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார். தென் ருஷ்யாவில் அவரது படைகள் பயங்கரமாகப் போராடிக் கொண்டிருக் கின்றன. இன்னும் பெரிய ராக்ஷஸப் போர்கள் கூடிய சீக்கிரமே நடக்கக் கூடும் என்று ராணுவ ஜோஸ்யர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ருஷ்யப் படைகளில் ஒன்று ருமேனிய நாட்டின் எல்லைக்கு வெகு சமீபத் தில் போய்விட்டதாம். ஜெர்மன் படைகளை இன்னொரு ருஷ்யப் பகுதி பிரிபெட் என்ற நதிக்கு அருகே உள்ள சதுப்பு நிலங்களுக்கருகே கொண்டு தள்ளி வைத்திருக்கிறதாம். அதி மோசக்காரப் பிரதேசமாம் அது. அதிலே அதி அடர்த்தியான காடுகளும், புதர்களும் நிறைந்திருப்பதால், பனிக்கட்டிகள் அதிகம் அங்கு ஏற்படுவதில்லையாம். மேலெழுந்தவாரி யாக பனிக்கட்டி படர்ந்திருக்கும். அடியில் எல்லாம் சேறும் ஜலமும் கலந்தே யிருக்கும். கொஞ்சம் பளுவான சாமான்களோ, ஆளோ அங்கு தெரியாதபடி போய்விட்டால், அதோடு அவர்களைச் செலவிலே எழுதிவிட வேண்டியது தானும். அந்தச் சதுப்பு நிலப் பிரதேசங்களை நன்றாக ஆராய்ந்து, ஆங்காங்கே மரங்களைப் பரப்பி ரகசிய வழி செய்திருக்கிறார் களாம் கொரில்லாப் படையினர். அவர்கள் ஜெர்மானியருக்கு உதவப் போகிறார்களா என்ன ? அது இல்லை. ஜெர்மானியரை ஒழித்தால் தானே அவர்களுக்கு சுகம் ? இந்தச் சதுப்பு நிலப் பிரதேசம் எத்தனை ஆயிரம் ஜெர்மானியர்களுக்கு மரணக் குழியாகப் போகிறதோ தெரிய வில்லை. இப்பொழுது ருஷ்யாவில் யுத்தம் போகிற போக்கைப் பார்த் தால், சிறிது காலத்திற்குப் பிறகு, ருஷ்ய மண்ணிலே ஒரு ஜெர்மானியன் கூட போர்க் கோலத்துடன் இருக்க மாட்டான் என்றும், ருஷ்யர்கள் ஜெர்மன் மண்ணில் நின்று போராடத் தொடங்குவார்கள் என்றும், அது ஹிட்லர் காண விரும்பாத காட்சிகளில் ஒன்றாக இருக்குமென்றும் தோன்றுகிறது. பெர்லின் மீது இன்னும் கடுமையான குண்டு வீச்சு இருக்கக் கூடும்; அதனால் பெர்லினில் உள்ள குழந்தைகளையும், ஸ்திரீ களையும் அப்புறப்படுத்தி விடுவது நல்லது என்றும் ஜெர்மன் பத்திரிகை கள் அலறுகின்றன. சோபியா நகரிலே ஏகக் குழப்பமாக இருக்கிறதாம். அந்நகரம் காலியாகிக் கொண்டே இருக்கிறதாம். ருஷ்யாவில் அட்டூழியம் செய்த நாஜிகளின் பெரிய ஜாபிதா ஒன்று தயாராகிறதாம். அந்த ஜாபிதாவில் சிக்குவோரெல்லாம், ருஷ்யரின் தூக்கில் சிக்கத் தவற மாட்டார்கள். ஏற்கெனவே ஒரு சிலரை விசாரித்து, சுட்டுத் தள்ளியாயிற் றே ! இந்த பீதி வேறே ஜெர்மானியருக்கு ! ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, போர்க்களத்திலும் சாவு என்றாலும், சும்மாயிருக்கும் பொழுது கேவலமாக நாய் போல் சுட்டுக் கொல்லப்படுவது என்றால் மனதிற்குப் பிடிக்குமா என்ன ?

போலந்து தேசத்தைச் சேர்ந்த யூக்ரேன் பிரதேசத்திலும், ருமேனிய எல்லையிலும் இரவு பகலாக நாஜிகள் வேலை செய்கிறார்களாம். பாது காப்பு அரண்கள் பல அங்கே அமைக்கப்படுகின்றனவாம். அந்த வேலை முடியும் வரையாவது, ருஷ்யப் படைகளை ருஷ்யாவில் தேக்கி நிறுத்தி வைக்க முயற்சிக்கிறார் ஜெர்மன் சேனாபதி. அது சாத்யம் என்று தோன்றவில்லை.

21 நாட்கள் ஓட்டம் ஓட்டமாகப் பின்வாங்கி ஓடிய ஜெர்மன் படைகள் இப்பொழுது ஒன்று கூடி நின்று எதிர்க்க முயலுகின்றன. 'மண்ணாசை ஏதுமில்லை எங்களுக்கு ! உயிராசையால் தான் கெடுகிறோம், பின்னால்' என்கிறார் ஒரு ஜெர்மன் அதிகாரி. நாயை அடிப்பானேன், எதையோ சுமப்பானேன் ? இதோடு விடப் போகிறார்களா ஜெர்மானியர்களை ? ...ரியல்லவோ இருக்கு அவர்களுக்கு பெரிய உத்சவம் !

இலங்கையில் சென்னை சாப்பர்-மைனர் படை

விடுதிகள் கட்டுவதற்கு மூங்கில்களைப் பிளக்கிறார்கள்.

பாலம் கட்டுகிறார்கள்.



தண்ணீருக்குள் மூழ்குகிறவர் தன் கவசத்தை ஒழுங்காக அணிந்து கொண்டு முழுக அவருடைய தோழர்கள் உதவுகிறார்கள்.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஜனவரி 11.—நேற்று, யுத்த நிலைமையைக் குறித்து நாஜித் தலைவர்கள் பெர்லின் நகரத்தில் கூடிப் பேசியதாக ஒரு ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

ஜனவரி 12.—ஜெர்மனியின் தொழிற்சாலைப் பகுதிகளான ஆஸ்செர்ஸ்லேபென், ஹால்பெர்ஸ்டாட், பரன்ஸ்விக், முதலிய விடங்களை அமெரிக்க விமானங்கள் கடுமையாகத் தாக்கின.

ஜனவரி 13.—ஜெர்மனியின் எல்லாப் பாகங்களிலிருந்தும் உத்தியோகஸ்தர்களைத் தருவித்து பரெஸ்லான் என்னுமிடத்தில் ஹிம்லர் ஒரு மகாநாடு நடத்தினர்.

சென்ற செவ்வாய்க்கிழமை அமெரிக்க விமானப் படைகள் தாக்கிய தன் பயனாக, ஜெர்மன் விமான உற்பத்தித் தொழிற்சாலையி லிருந்த 150 போர் விமானங்கள் நாசமாயின.

ஜனவரி 16.—தன் உடலைத் தேற்றிக் கொள்ளும் பொருட்டு மொராக்கோவைச் சேர்ந்த மர்ரகேஷ் என்னுமிடத்திற்குச் சென்றிருந்த மிஸ்டர் சர்ச்சில், சென்ற புதன்கிழமை ஜெனரல் டிகாலேக் கண்டு பேசினர்.

தனக்கு வழங்கப்பட்ட நேசதேசப் படைகளின் பொதுத் தலைவர் என்னும் பதவியை எற்றுக் கொள்ளப் போகும் வழியில், ஜெனரல் அய்சினேவர், மிஸ்டர் ரூஸ்வெல்டையும் மிஸ்டர் சர்ச்சிலேயும் கலந்து பேசினர்.

ஜனவரி 17.—ஜெனரல் அய்சினேவருக்கு அடுத்த பதவியிலுள்ள ஏர் சிப் மார்ஷல் ஆர்தர் டெட்டர் இன்று பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தார்.

போர்க் களத்தில் ஜெனரல் அய்சினேவருடைய ஆணைப்படி போரை நடத்தும் பொருட்டு அமெரிக்கப் படைத் தலைவராக ஜெனரல் ஓ. ப்ராட்லி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜனவரி 18.—மிஸ்டர் சர்ச்சில் லண்டனுக்குத் திரும்பினர். மன்னருடன் விருந்துண்டு யுத்த நிலைமைப் பற்றி விவாதித்தார்.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

ஜனவரி 11.—அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட், அமெரிக்க காங்கிரசுக்கு வருஷந்தோறும் அனுப்பும் செய்தியை அனுப்பினர்.

ஜனவரி 12.—அமெரிக்காவி லிருந்து இங்கிலாந்திற்குத் துணைக் கப்பலின் உதவி இல்லாமல் 21 நாட்களில் சாமான்களை ஏற்றிப் போகக் கூடிய "விக்டரி" கப்பல்களில் ஒன்று, முதன் முதலாகக் கடலில் இறக்கப்பட்டது.

ஐரோப்பாவைத் தாக்கும் பொருட்டு, ஒரு படை பிரேசிலிலிருந்து ஜூலை மாதம் கிளம்பு மென்று பிரேசில் யுத்த மந்திரி குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் 34,000 மைல்கள் நீளத்திற்கு ரோடுகள் அமைக்க வேண்டி, ஒரு திட்டத்தை அமெரிக்கத் தலைவர், அரசாங்க சபைக்குச் சமர்ப்பித்தார்.

ஜனவரி 13.—எல்லாப் போர் முனைகளிலும் சேர்ந்து சென்ற டிசம்பர் மாதம் 23-ம் தேதி வரை அமெரிக்கப் படைகளில் காயப் பட்டவர்களும் உயிரிழந்தவர்களும் 105,229 பேர்களென்றும், அவர்களில் 16,831 பேர்கள் கொல்லப்பட்டார்க ளென்றும், 38,916 பேர்கள் காயப் பட்டார்க ளென்றும், 24,067 பேர்கள் காணமற் போனார்க ளென்றும், 25,415 பேர்கள் யுத்தக் கைதிகளாகப் பிடி பட்டார்களென்றும் அமெரிக்க யுத்த மந்திரி அறிவித்தார்.

அமெரிக்காவில் யுத்தக் கைதிகளா யிருக்கும் ஜப்பானியர்கள் எப்படி யிருக்கிறார்க ளென்பது பற்றி தமக்கு அறிக்கை கிடைக்கிற வரையில், யுத்தக் கைதிகளை மாற்றிக் கொள்ளுவது பற்றித் தாம் ஆலோசிக்க முடியாதென்று, ஜப்பான் அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்திற்குப் பதிலளித்து விட்டது.

தென் அட்லாண்டிக் சமுத்திரத்தில் மேலும் 2 ஜப்பான் நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

1945-ம் வருஷம் ஜூன் மாதத் தோடு முடியும் வருஷத்திற்கு 10,000 கோடி டாலர்கள் செலவாகு மென்று மதிப்பிட்டு, திட்டத்தை அரசாங்க சபையின் அங்கீகாரத்திற்கு ரூஸ்வெல்ட் அனுப்பியிருக்கிறார்.

அமெரிக்கத் தலைவரின் மனைவியாரான ஸ்ரீமதி எலியனர் ரூஸ் வெல்ட் இந்தியாவிற்கும் சூங்கிங்குக்கும் விஜயம் செய்வா ரென்று தெரிகிறது.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜனவரி 11.—தென் கிழக்குப் படைத் தலைமை காரியாலயத்திலிருந்து இன்று வெளி வந்த அறிக்கையில் கீழ்க் கண்ட விவரங்கள் காணப்படுகின்றன :—மாயு மலையின் மேல் திசையில் நேச தேசப் படைகள் முன்னேறிப் போய் அநேக முக்கியமான இடங்களையும் மௌங்டாவையும் கைப்பற்றின. மாயு தீபகற்பத்திலும் நேச தேச விமானப் படை எதிரி ஸ்தானங்களைத் தாக்கிக் கொண்டிருக்கின்றது.

ஜனவரி 12.—இன்று காலை வைசிராய் மாளிகையில் வைசிராய் தலைமையில் தேசியப் பாதுகாப்புக் கௌன்சிலின் 13-வது கூட்டம் நடை பெற்ற போது, கனம் ஸ்ரீவத்சவர் உணவுப் பொருள் நிலை பற்றி செய்த அறிக்கையைப் பரிசீலனை செய்தார்கள்.

ஜனவரி 13.—விசாகப்பட்டினத்தில் எதிரி விமானம் வந்து சில வெடி குண்டுகளை எறிந்தது.

ஜனவரி 14.—கன்யின்டான், டில்பார என்னும் கிராமங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

1939-40 முதல் 1943-44 வரை 715 கோடி ரூபாய் இந்தியப் பாதுகாப்பை முன்னிட்டுச் செலவாகி யிருக்கிறது.

ஜனவரி 15.—இன்று மீண்டும் வைசிராய் தலைமையில் தேசீயப் பாதுகாப்புக் கௌன்சில் கூடியபோது, தென்கிழக்கு ஆசியப் படைத் தலைமை பற்றி அட்மிரல் லூயி மௌண்ட் பாட்டனும், மேன்மை தங்கிய இந்திய படைத் தலைவர் தற்போதுள்ள யுத்த நிலைமையைக் குறித்தும் அறிக்கைகள் சமர்ப்பித்தனர்.

ஜனவரி 17.—மௌங்டாவுக்கு அருகிலுள்ள பகோனு, நியாவுங்யாங் ஆகிய ஊர்களை நேச நாட்டினர் கைப்பற்றிக் கொண்டனர்.

வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் ஆர். ஜி. காசி கராச்சிக்கு வந்து சேர்ந்தார்.

ரஷ்யாவும் பின்லந்தும்.

ஜனவரி 11.—கிரிமியாவைச் சேர்ந்த கெர்ச் தீபகற்பத்தின் வடபகுதியில் ரஷ்யப் படைகள் இறங்கிவிட்டன.

சோவியத்-போலந்து எல்லை சம்பந்தமாக ரஷ்ய அரசாங்க அறிக்கையொன்று நேற்று வெளி வந்தது.

பொலேசியப் பகுதியைச் சேர்ந்த சார்னி என்னும் முக்கியமான ஜங்ஷனை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

பக் ஆற்றிற்கு 12 மைல் தூரத்திலுள்ள உலனேப் என்னுமிடத்தைச் செம்படைகள் அணுகிவிட்டன.

வெள்ளை ரஷ்யப் போர் முனையிலுள்ள மோஷிர், கலிங்கோவிச்சி ஆகிய இரண்டு இடங்களையும் செம்படைகள் கைப்பற்றின.

ஜனவரி 15.—போலந்தில் ஜெர்மன் தளமான பின்ஸ்க் ஆபத்தான நிலைமையி லிருக்கிறது.

கெர்ச் தீபகற்பத்தின் மற்றொரு பகுதியில் சோவியத் படைகள் போயிறங்கின.

ஜனவரி 16.—கலிங்கோபிச்சிக்கு மேற்கேயும் வடமேற்கேயும் உள்ள பல சிற்றூர்களை நேச தேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜனவரி 17.—போலந்துக்கும் ரஷ்யாவுக்கும் சமரசப் பேச்சுக்கள் நடத்த, அமெரிக்கா ஒப்புக் கொண்டிருப்பதால் நேரில் எவ்விதப் பேச்சுக்களும் நடத்திக் கொள்ளுவதில்லை யென்று சோவியத் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

ஜனவரி 17.—ஜெர்மன் போக்கு வரவுக்கு மத்திய ஸ்தலமான ரோப்னேவுக்கு 13 மைல் தூரத்தில் ரஷ்யப் படைகள் இருக்கின்றன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஜனவரி 11.—எட்ரியாடிக் கடலில் 4 எதிரிப் போர்ப் படகுகளை நேச தேசக் கப்பற் படை மூழ்கடித்து விட்டது.

சியோனு பிரபு சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜனவரி 12.—கர்வாரோ என்னுமிடத்தை 5-ம் படை கைப்பற்றியது.

மாண்டி ரெய்னே, மாண்டி மொலினே மிடங்களை 5-ம் படையைச் சேர்ந்த பிரஞ்சுப் படைகள் கைப்பற்றின.

ஜனவரி 15.—அக்வபான் டேட்டா என்னுமிடத்தை 5-ம் படை கைப்பற்றியது.

ஜனவரி 16.—காசினேவுக்கு 3 மைல்களுக்கு அப்பாலுள்ள மண்டி டிராக்சியோ என்னும் மலையை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

கார்டிடோ என்னுமிடத்தை பிரஞ்சுப் படைகள் கைப்பற்றின.

ஜனவரி 17.—ஐந்தாம் படையின் முன்னணிப் படை ராபிடோ ஆற்றை அடைந்து விட்டது.

அடுத்த வசந்த காலத்தில் நேச நாட்டுப் படைகள் ரோமாபுரியில் இருக்குமென்று ஜெனரல் சர் ஹென்ரி வெய்ட்லான்ட் வில்சன் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறினர்.

ஜனவரி 17.—சான் எலியா என்னுமிடத்தையும் மற்றும் பல விடங்களையும் 5-ம் படை கைப்பற்றியது.

ஜனவரி 17.—ஜப்பானிய நகரங்கள் காலி செய்யப்படுகின்றன. டோக்கியோவையும் அதை யடுத்துள்ள பகுதிகளையும் காலி செய்வது சம்பந்தமாக உள் நாட்டு மந்திரிக் காரியாலயத்தார் கலந்து பேசுகிறார்கள்.

சில சமயங்களில், இந்தோ சீனவிலுள்ள பிரஞ்சு கவர்னர் ஜெனரல் பிடிவாதமாக நடந்து கொண்டதாக, இந்தோ சீனவிலுள்ள ஜப்பானிய தூதர் கூறுகிறார்.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

ஜனவரி 11.—போலந்து அரசாங்க மந்திரி சபை இரண்டு முறை லண்டனில் கூடியது.

ஜனவரி 12.—பொதுவாக புகாரெஸ்டிலும் ருமேனியாவிலும் பெரும் பீதி நிலவுகிறது.

பாசரேபியா முழு மூச்சாகக் காலியாகிக் கொண்டிருக்கிறது.

பல்கேரியத் தலைநகரமான சோபியாவும் காலியாகிக் கொண்டு வருகிறது.

இன்று மீண்டும் போலந்து மந்திரி சபை லண்டனில் கூடியது.

ஜனவரி 13.—ருமேனியத் தலை நகரான புகாரெஸ்டும் காலி செய்யப் படுகிறது.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜனவரி 11.—சிலிபிஸ் தீவில் கெந்தேரி என்னுமிடத்தையும் எதிரி ஸ்தானங்களையும் அமெரிக்க விமானப் படைகள் தாக்கின.

ஜனவரி 13.—பசிபிக் கொள்கை பற்றிக் கலந்து பேசும் பொருட்டு நியூசிலந்து பிரதம மந்திரி தலைமையில் ஒரு தூதுக் கோஷ்டி சிட்னி வந்து சேர்ந்தது.

ஜனவரி 14.—நந்தரிவா என்னுமிடத்தை ஆஸ்திரேலியப் படைகள் கைப்பற்றின.

ஜப்பான் அன்னிய நாட்டு மந்திரியான மிஸ்டர் மமோரு ஷிகிமிட்டை, டோக்கியோவிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகரான ஹெர் ஹெய்ன்ரிச் ஸ்டிராமரைக் கண்டு பேசினர்.

ஜனவரி 16.—ஹுவான் தீபகற்பத்தில், ஜப்பானியர்களுக்கு மிகுந்திருந்த ஒரே தளமான சியோ என்னுமிடத்திற்கு ஆஸ்திரேலியப் படைகள் வந்து விட்டன.

ஜனவரி 17.—சியோவை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.